விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka




# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 189 வள்ளுவர் ஆண்டு 2054 ஆனி 11 திங்கட்கிழமை (26.06.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

## சட்டங்கள் பாதுகாக்கப்பட வேண்டும் மக்கள் அதனையே எதிர்பார்க்கிறார்கள்

### ஜே.வி.பி தலைவர் அநுரகுமார



(மெல்போர்ன்)

சட்டங்கள் பாதுகாக்கப்பட வேண்டும். அந்த சட்டங்கள் நியாயமான முறைப்பில் நடைமுறைப்படுத்தப்படும் நாடொன்றையே மக்கள் எதிர்பார்க்கிறார்கள் என தேசிய மக்கள் சக்தியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

அவுஸ்திரேலியாவின், மெல்போர்ன் நகரில் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது,

உங்கள்எதிர்பார்ப்பு என்ன? 16

# ஐ.நாவின் அறிக்கை அரசுக்கு எச்சரிக்கை

### தமிழ்த் தலைவர்கள் வரவேற்பு



(கொழும்பு)

இலங்கை அரசாங்கம் தொடர்ச்சியாக பொறுப்புக்கூறலை தவிர்த்து வருகின்ற நிலையில் ஒரு சிவப்பு எச்சரிக்கையாக அமைந்துள்ள ஐ.நா உயர்ஸ்தானிகரின் வாய்மொழி மூலமான அறிக்கையை தாம் வரவேற்பதாக தமிழ் அரசியல் கட்சிகளின் தலைவர்கள் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் இலங்கை அரசாங்கத்தை பொறுப்புகூறச் செய்வதற்கான அழுத்தத்தினை ஐ.நா உள்ளிட்ட சர்வதேச நாடுகள் வலுவாக பிரயோகிக்க வேண்டும் என்றும் அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

(02ஆம் பக்கம் பார்க்க)

தாக்குதல் சாத்தியம்

## ஜனாதிபதிக்கு உயர் அடுக்கு பாதுகாப்பு

(கொழும்பு)

ஆயுதக் குழுக்களின் தாக்குதல் சாத்தியம் காணப்படுவதனால் நாடு திரும்பவுள்ள ஜனாதிபதிக்கு உயர் அடுக்கு பாதுகாப்புக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட் 15

## அரச காணிகள் தொடர்பாக புதிய திட்டம்

(கொழும்பு)

அரச காணிகளை அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக விடுவிக்கும் புதிய திட்டம் விரைவில் அறிமுகப்படுத்தப்படவுள்ளதாக காணி சீர்திருத்த ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அதன்படி, எதிர் 15

## முல்லையில் விபத்து; ஒருவர் உயிரிழப்பு

### திட்டமிட்டு நடத்தப்பட்டதா என பொலிஸார் விசாரணை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவில் இடம்பெற்ற வாகன விபத்தில் இளைஞன் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இதில் வவுனியா தேக்கவத்தையைச் சேர்ந்த கமலதாஸ் கபில்தாஸ் (வயது-26) என்ற 15

பல்லாயிரக்கணக்கான அடியார்கள் புடைசூழ

## புங்குடுதீவு கண்ணகை அம்மனுக்கு நேற்று மகா கும்பாபிஷேகம்



02

## போதைக்கு பணம் வழங்க மறுத்த பெண்ணை எரித்துக் கொன்ற இளைஞன்

### அளவெட்டியில் கொடூரம்

(யாழ்ப்பாணம்)

போதைப்பொருளை வாங்க பணம் தருமாறு உறவுக்கார பெண் ஒருவரை இளைஞன் ஒருவா் கோரியபோது பணம் தர பெண் மறுத்ததையடுத்து குறித்த இளைஞ்ன் அப்பெண்ணை மண்ணெண்ணெய் ஊற்றி எரித்துக் கொலை செய்துள்ளார்.

இதில் அளவெட்டி கிழக்கு, அளவெட்டி பகுதியைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தாயாரான றெஜிநிகான்ஷன் உஷாநந்தினி (வயது-43) என்ற பெண்ணே நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் 15

## கடன் மறுசீரமைப்புக்காக விசேட வங்கி விடுமுறை

### மத்திய வங்கி ஆளுநர்

(கொழும்பு)

உள்நாட்டு கடன் மறுசீரமைப்பை செயற்படுத்துவதற்கான காலம் ஒன்று அவசியமாக உள்ளதனால், எதிர்வரும் 30ஆம் திகதி வங்கிகளுக்கு விசேட விடுமுறை வழங்கப்படுவதாக மத்திய வங்கி ஆளுநர் நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

நேற்று இடம்பெற்ற செய்தியாளர் 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புங்குடுதீவு...

புங்குடுதீவு கண்ணகை அம்மன் (இராஜராஜேஸ்வரி அம்மன்) ஆலய மகா கும்பாபிஷேகம் நேற்று மிகச் சிறப்பாக இடம்பெற்றது.

பல்லாயிரக்கணக்கான அடியார்கள் புடைசூழ, குதிரைகள், யானைகள் வலம்வர உலங்குவானூர்தி பூமாரி பொழிய மங்கள வாத்தியங்கள் முழங்க, அந்தண சிவாச்சாரியார்கள் வேதம் ஓத மகா கும்பாபிஷேகம் இடம் பெற்றது. (ம)

## ஐ.நாவின்...

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை 53ஆவது கூட்டத் தொடரில் இலங்கையில் நல்லிணக்கம், நீதி, பொறுப்புக்கூறலை உறுதி செய்தல் தொடர்பிலான உயர்ஸ்தானிகர் வாய்மொழி மூலமான அறிக்கையை வெளியிட்டுள்ள நிலையில், அது குறித்து கருத்து வெளியிடும்போதே தமிழ் அரசியல் கட்சிகளின் தலைவர்கள் மேற்கண்டவாறு தெரிவித்தனர். அவர்கள் மேலும் தெரிவித்துள்ளதாவது.

**சி.வி.விக்னேஸ்வரன்**

தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகமும் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்னேஸ்வரன் தெரிவிக்கையில்,

ஐ.நா. உயர்ஸ்தானிகரின் வாய்மூலமான அறிக்கையானது, பொருளாதார ரீதியில் நெருக்கடிகளை சந்தித்துள்ள மக்களை மேலும் துன்புறுத்தாமல், நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. அத்துடன், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தமிழ் கட்சிகளுடன் முன்னெடுத்துள்ள பேச்சுவார்த்தையும் வரவேற்கப்பட்டுள்ளது. குறிப்பாக, ஜனாதிபதி எம்முடனான பேச்சுவார்த்தையின்போது, அரச திணைக்களங்களினால் அபகரிக்கப்படும் காணிகள் பற்றி கரிசனை செலுத்தியிருந்தார்.

விசேடமாக வனத் திணைக்களம் 1985 ஆம் ஆண்டு இருந்தவாறான வரைபடத்துக்குரிய காணிகளையே பரிபாலனம் செய்ய வேண்டும் என்று உத்தர விட்டிருந்தார். ஆகவே, ஐ.நா. உயர்ஸ்தானிகர் வரவேற்றுள்ள நிலையில் அந்த விடயங்கள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்றார்.

**சுமந்திரன்**

இலங்கை தமிழரசு கட்சியின் ஊடகப் பேச்சாளரும், வெளி விவகாரங்களுக்கான செயலாளருமான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தெரிவிக்கையில்,

ஐ.நா.உயர்ஸ்தானிகரின் வாய்மூலமான அறிக்கையானது, மிகக் காட்டமானதாக வெளிவந்துள்ள நிலையில் அதனை நாம் முழுமையாக வரவேற்கின்றோம்.

மிக முக்கியமாக இலங்கை அரசாங்கம் தொடர்ச்சியாக பொறுப்புக்கூறல் விடயத்தில் அசமந்தமான போக்கினை பின்பற்றி வருகின்றமை பகிரங்கமாக உயர்ஸ்தானிகர் தனது வாய்மொழி மூலமான அறிக்கையில் வெளிப்படுத்தியுள்ளார்.

அத்துடன், பயங்கரவாத தடைச் சட்டம் தொடர்ந்து அமுலில் இருப்பதையும், அது நீக்கப்பட வேண்டியதன் அவசியத்தையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

**கஜேந்திரகுமார்**

தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும், யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவிக்கையில்,

53 ஆவது கூட்டத்தொடரில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஐ.நா உயர்ஸ்தானிகரின் வாய்மொழி மூலமான அறிக்கையில் சர்வதேச மனிதாபிமானச் சட்டங்களை மீறியமை தொடர்பிலான பொறுப்புக்கூறலில் இருந்து இலங்கை அரசாங்கம் விலகி நிற்கிறது என்ற விடயம் மிகவும் அப்பட்டமாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

அத்துடன், இலங்கை அரசாங்கம் சர்வதேசத்தினை ஏமாற்றுவதற்கான உத்திகளில் ஒன்றாக ஆரம்பிக்கப்பட்ட வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களுக்கான அலுவலகத்தின் செயலற்ற தன்மையும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

அத்துடன், பொறுப்புக்கூறலின்றி நல்லிணக்கம் சாத்தியமில்லை என்பதும் அரசாங்கத்தின் சமகால அடக்குமுறைகள் பற்றியும் குறித்த அறிக்கையில் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றார்.

**சுரேஷ் பிரேமச்சந்திரன்**

ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியின் ஊடகப் பேச்சாளரும், ஈ.பி.ஆர்.எல்.எப்.இன் தலைவருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவிக்கையில்,

ஐ.நா. உயர்ஸ்தானிகர் தனது வாய்மொழிமூலமான அறிக்கையில், இலங்கை அரசாங்கம் நல்லிணக்கத்துக்கான முயற்சிகளை முன்னெடுப்பதாக கூறிவந்தாலும், பொறுப்புக்கூறுவதற்கு தயாரில்லாத நிலையிலேயே உள்ளது என்பதை வெளிப்படையாக கூறியுள்ளார்.

அதுமட்டுமன்றி, போரின்போதும், அதன் பின்னரும் அரசாங்கம் ஜனநாயக விரோதமான செயற்பாடுகளை முன்னெடுத்து பொதுமக்கள் மீது அடக்குமுறைகளை பிரயோகிக்கிறது என்பதையும் மிகத் தெளிவாக வெளிப்படுத்தியுள்ளார். (ம-7)


# பத்தாம் ஆண்டு நினைவு!

அமரர்

## கனகசபை இராசநாயகம் (சின்னண்ணை)




எத்துன்பம் வருங்கால் எங்களின் காவலரே!
வித்துகள் நாம்வளர விளைநிலம் ஆனவரே !
உத்தமச் செயல்களினால் உள்ளத்தால் உயர்ந்தவரே!
பத்தாண்டுகள் கழிந்தாலும் போகாதே நினைவுகள்.

10 ஆம் ஆண்டு நினைவு தினம் அவரது இல்லத்தில் மிகவும் சிறப்பாகக் கொண்டாடப்படும்.

பிறப்பு 22.05.1950 இறப்பு 16.06.2013

(C-6817) தகவல் : குடும்பத்தினர்





அமரர் ஆங்கில ஆசிரியர்
**அ.க.ந.விஜயரத்தினம்** அவர்களின்

# நூற்றாண்டு விழாவும் பரிசளிப்பு நிகழ்வும்

அமரர் ஆங்கில ஆசிரியர் அ.க.ந.விஜயரத்தினம் B.A (Lond) அவர்களின் நூற்றாண்டு விழாவினைச் சிறப்பிக்குமுகமாக காரைநகர் பாடசாலை மாணவர்களிடையே நடாத்தப்பட்ட 'ஆங்கிலப் பேச்சுப் போட்டி - 2023' இன் பரிசளிப்பு நிகழ்வுகள்

இடம் :- நடராஜா மண்டபம், யா/காரைநகர் இந்துக் கல்லூரி, காரைநகர்.
திகதி :- 26.06.2023, திங்கட்கிழமை
நேரம் :- பிற்பகல் 2 மணி

**தலைவர்:**
**திரு.அ.ஜெகதீஸ்வரன்** அவர்கள்
(அதிபர், யா/காரைநகர் இந்துக் கல்லூரி, காரைநகர்)

**பிரதம விருந்தினர்:**
**திரு.மு.செல்வஸ்தான்** அவர்கள்
(அதிபர், யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி, சுன்னாகம்)

**சிறப்பு விருந்தினர்கள்:**
**திரு.ந.பரமசிவம்** அவர்கள்
(ஓய்வுநிலை அதிபர், யா/யாழ்ற்றன் கல்லூரி, காரைநகர்)
**திரு.சிவகுரு மகேந்திரன்** அவர்கள்
(ஓய்வுநிலை பிரதி அதிபர், யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி, சுன்னாகம்)
**திரு.இராஜேந்திரம் ஜோர்ஜ்** அவர்கள்
(ஓய்வுநிலை பிரதி அதிபர், யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி, சுன்னாகம்)
**திருமதி சத்தியகுமாரி சிவகுமார்** அவர்கள்
(அதிபர், யா/விக்ரோறியாக் கல்லூரி, சுழிபுரம்)
**திருமதி அஜந்தினி யதீஸ்குமார்** அவர்கள்
(அதிபர், யா/ யாழ்ற்றன் கல்லூரி, காரைநகர்)

*அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்*

இவ்வழைப்பினை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்



# மரண அறிவித்தல்

மலர்வு 12 - 01 - 1958



உதிர்வு 24 - 06 - 2023

## பசுபதி புவனேந்திரம்

ஊரெழு கிழக்கைப் பிறப்பிடமாகவும் கோண்டாவில் வடக்கை வசிப்பிடமாகவும் தற்பொழுது ஜேர்மனியில் வசித்தவருமான பசுபதி புவனேந்திரம் அவர்கள் 24.06.2023 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னட்டியன் பசுபதி - மாணிக்கம் தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற பொன்னர் தியாகராசா மற்றும் பூரணம் தம்பதிகளின் ஆசை மருமகனும் கனகேஸ்வரி அவர்களின் பாசமிகு கணவரும் ஜேர்மனியில் வசிக்கும் பகீர், லக்சி, சஞ்சு, சாரு ஆகியோரின் அன்புத் தந்தையும் கபிலன் அவர்களின் அன்பு மாமனாரும் ஆதி, தாரா, வானு ஆகியோரின் அன்புப் பேரனும் இராசேந்திரம், சிவமணி, மகேந்திரம், தெய்வேந்திரம், காலஞ்சென்ற சந்திரன் மற்றும் சந்திராதேவி, சறோஜாதேவி, குணேந்திரம் (சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்றவர்களான சுகுணேஸ்வரி, சாந்தன் மற்றும் சிவானந்தன், தயாநிதி, காலஞ்சென்ற தருமதுரை மற்றும் சிவனேஸ்வரி, யோகமலர், மலர்ராணி, வனிதா, சிவராசா, இராசையா ஆகியோரின் அன்பு மைத்துனரும் சேகர் அவர்களின் அன்புச் சகலனும் சுதா அவர்களின் ஒன்று விட்ட சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

வளர்பிறை,
ஊரெழு கிழக்கு.

(16095)

*தகவல்:-* குடும்பத்தினர்
077 618 1437


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்த அரசாங்கம் கோட்டாவை பொறுப்புக்கூறலிற்கு உட்படுத்தாது

### சர்வதேச உண்மை, நீதிக்கான திட்ட நிறைவேற்றுப் பணிப்பாளர் ஜஸ்மின் சூக்கா தெரிவிப்பு



(கொழும்பு)

**இலங்கை அரசாங்கம் கோட்டாபய ராஜபக்ஷவை பொறுப்புக்கூறச் செய்வது என்பது மிகவும் சாத்தியமற்ற விடயம் என சர்வதேச உண்மை, நீதிக்கான திட்டத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ஜஸ்மின் சூக்கா தெரிவித்துள்ளார்.**

ஜ"ரிஸ்ட் இணையத்தளத்திற்கு இதனை அவர் தெரிவித்துள்ளார்.

போர்க்குற்றங்கள் மற்றும் மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்கள் போன்ற பாரதூரமான மீறல்களில் ஈடுபட்டவர்கள் தண்டனையின் பிடியிலிருந்து விலக்களிக்கப்படுவது ஜே.வி.பி காலத்தில் கோட்டாபய ராஜபக்ஷ மாத்தளைக்கு பொறுப்பாக காணப்பட்ட காலம் வரை நீள்கின்றது என்பதை மனித புதைகுழிகள் குறித்த புதிய அறிக்கை வெளிப்படுத்துகின்றது.

அன்று தொடக்கம் இன்று வரை ஜே.வி.பி காலத்தில் போர்க்குற்றத்தில் ஈடுபட்டவர்களோ அல்லது யுத்தத்தின் இறுதியில் போர்க்குற்றத்தில் ஈடுபட்டவர்களோ பொறுப்புக்கூறலிற்கு உட்படுத்தப்படவில்லை.

மாத்தளையில் இடம்பெற்ற சம்பவங்களிற்காகவோ அல்லது யுத்த முடிவில் இடம்பெற்ற சம்பவங்களிற்காகவோ இந்த அரசாங்கம் கோட்டாபய ராஜபக்ஷவை பொறுப்புக்கூறச் செய்வது என்பது மிகவும் சாத்தியமற்ற விடயம்.

தற்போதைய அரசாங்கம் அதன் இருப்பிற்காகவும் ஆதரவிற்காகவும் கோட்டாபய ராஜபக்ஷவிற்கு கடமைப்பட்டிருப்பதே இதற்கு காரணம் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (நி)

## ஊழியர் சேமலாப நிதிய சலுகைகள் குறைக்கப்படும் அபாயம்-ஐ.ம.ச சாடல்

(கொழும்பு)

சர்வதேச நாணய நிதியத்தின் உடன்படிக்கைகளின் பிரகாரம் அரசாங்கம் கொண்டு வரும் புதிய பிரேரணையால் ஊழியர் சேமலாபா நிதியத்தின் சலுகைகள் குறையும் வாய்ப்பு இருப்பதாக ஐக்கிய மக்கள் சக்தி குற்றம் சுமத்தியுள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான திஸ்ஸ அத்தநாயக்க நேற்று முன்தினம் தென்னிலங்கை ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில் இந்த குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் கருத்து தெரிவித்த அவர், சர்வதேச நாணய நிதியத்தின் உடன்படிக்கைகளின் பிரகாரம் அரசாங்கம் கொண்டு வந்துள்ள உள்ளூர் கடன் மறுசீரமைப்பு பிரேரணைக்கு ஐக்கிய மக்கள் சக்தி ஒருபோதும் ஆதரவு வழங்க போவதில்லை.

எங்கள் கட்சியின் எதிர்ப்பு தொடர்பில் சர்வதேச நாணய நிதியத்திடம் தெரிவிக்க எதிர்க்கட்சித் தலைவர் தீர்மானித்துள்ளார்.

இந்த பிரேரணையை எதிர்வரும் வாரத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க ஜனாதிபதி தீர்மானித்துள்ளதுடன் எதிர்க்கட்சிகள் இந்த பிரேரணைக்கு எதிராக வாக்களிக்க தீர்மானித்துள்ளன.

ஜனாதிபதியால் சமர்பிக்கப்படவுள்ள குறித்த பிரேரணையால் நாட்டு மக்கள் பெரும் பொருளாதார சவாலை எதிர்கொள்ள நேரிடும் என்பதுடன், ஈ.பி.எப், ஈ.ரீ.எப் போன்ற ஊழியர் உரிமைகளும் குறைக்கப் படலாம் என திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார். (நி)

## இலங்கையின் உள்விவகாரங்களில் தலையிடும் மேற்குலகம்

### ரஷ்ய தூதுவர் கண்டனம்

(கொழும்பு)

சில சர்வதேச விவகாரங்களில் இலங்கை எடுத்துள்ள சமநிலையான, நடுநிலையான நிலைப்பாட்டை இலங்கைக்கான ரஷ்யத் தூதுவர் லெவென் ஜகாரியன் பாராட்டியுள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் அவர் இதனை தெரிவித்துள்ளார்.

இலங்கை போன்ற சுதந்திர நாடுகளின் உள்நாட்டு விவகாரங்களில் தலையிடுவதற்கான மேற்குலகின் முயற்சிகளை அவர் கண்டித்துள்ளார்.

மேற்குலக நாடுகள் தங்களின் உள்விவகாரங்கள் குறித்துக் கவனம் செலுத்த வேண்டும் என தெரிவித்துள்ள ஜகாரியன் இறைமையுள்ள நாடுகளின் உள்விவகாரங்களில் தலையிடுவது முற்றாக ஏற்றுக்கொள்ள முடியாத விடயம் எனவும் தெரிவித்துள்ளார்.(நி)

## சமுர்த்தி உள்ளிட்ட நிவாரணத் திட்டங்கள் அரசியலுக்காக கொண்டு வரப்பட்டன-டலஸ்

(கொழும்பு)

வறுமைக்கோட்டுக்கு கீழ் உள்ளவர்களுக்கான உதவித் திட்டங்கள் அரசியல் நோக்கங்களுக்காக ஆரம்பிக்கப்பட்டதால் அவற்றின் இலக்குகளை அடைய முடியவில்லை என சுதந்திர மக்கள் காங்கிரஸின் தலைவர் டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

இந்த நிலையினுள் அரசாங்கத்தினால் ஆரம்பிக்கப்படவுள்ள அஸ்வெசும நிவாரண செயற்றிட்டம் பல முரண்பாடுகளை தோற்றுவித்துள்ள அதேவேளை இத்திட்டத்திற்கு எதிராக கடும் எதிர்ப்புகள் வெளிவருவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

நாவல பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்து வெளியிட்ட அவர், பொருளாதார பாதிப்பால் பலர் வறுமை நிலைக்கு தள்ளப்பட்டுள்ள இந்த சந்தர்ப்பத்தில் குறித்த நிவாரணத் திட்டம் சமூக கட்டமைப்பில் முரண்பாடுகளை தோற்றுவித்துள்ளதாக சுட்டிக்காட்டியுள்ளார்.

மக்களின் ஏழ்மையில், அஸ்வெசும நிவாரண செயற்றிட்டம் கொண்டு வரப்படுவதாகவும் இந்த உதவித் திட்டம் வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள மக்களை நேரடியாக குறி வைக்கிறதா என்பது சந்தேகமே என்றும் டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

மேலும் பொருளாதார ரீதியில் மக்களை நெருக்கடிக்குள்ளாக்கி, தேர்தல் ஒன்று அவசியமில்லை என மக்களே குறிப்பிடும் நிலையை தோற்றுவிக்க அரசாங்கம் முயற்சிக்கிறது என்றும் இதனை வன்மையாக கண்டிப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (நி)

## சுகாதாரப் பேரிடரை நோக்கிச் செல்லும் இலங்கை

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித் சாடல்

(கொழும்பு)

இலங்கை மிகவும் பாரதூரமான சுகாதாரப் பேரிடரை நோக்கிச் செல்கிறது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

மருத்துவமனைகளுக்கு தேவையான மருந்துப் பொருட்கள் தட்டுப்பாடு காரணமாக இந்த நிலை ஏற்பட்டுள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ குற்றம் சாட்டியுள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நேற்று முன்தினம் சனிக்கிழமை விடுத்துள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.



மருந்துப் பற்றாக்குறை, மருந்துப் பொருட்களின் விலை உயர்வு, மருந்துகளின் ஊடாக மோசடி, ஊழல் என ஒட்டு மொத்த அரசாங்கமும் இந்நாட்டு நோயுற்ற மக்களின் வாழ்வோடு விளையாடி வருவதாக எதிர்க்கட்சித் தலைவர் கடுமையாக சாடியுள்ளார். (நி)

## மசகு எண்ணெய் விலையில் மாற்றம்

(வோஷிங்டன்)

உலக சந்தையில் மசகு எண்ணெயின் விலை நேற்று சற்று வீழ்ச்சியைப் பதிவு செய்துள்ளது.

இதன்படி, டபிள்யூ. டி. ஐ மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை 69.16 அமெரிக்க டொலராக பதிவாகியுள்ளது.

அத்துடன், பிரென்ட் ரக மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை 73.85 அமெரிக்க டொலராக வீழ்ச்சியை பதிவு செய்துள்ளது.

எனினும் இயற்கை எரிவாயு பீப்பாய் ஒன்றின் விலை, அதிகரிப்பை பதிவு செய்து 2.72 அமெரிக்க டொலராக காணப்படுகிறது. (நி)

## நிவாரண உதவித் திட்டத்தில் உள்வாங்கப்படாவிட்டால் முறையிடலாம்

(கொழும்பு)

நிவாரண உதவித் திட்டத்தில் உள்வாங்கப்படாத குடும்பங்கள் எதிர்வரும் 10ஆம் திகதி வரை தமது முறைப்பாடுகளை சமர்ப்பிக்க முடியும் என பிரதமர் தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார்.

சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களிடமோ அல்லது பிரதேச செயலகங்களிடமோ மேன்முறையீடுகளை கையளிக்க முடியும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

உண்மையான குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களை இந்தத் திட்டத்தில் இணைத்துக் கொள்ள அனைவரும் ஒன்றிணைந்து செயற்படுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொது மக்கள் பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள் அனைவரும் ஒன்றிணைந்து இத்திட்டத்தை வெற்றியடையச் செய்ய வேண்டும் என்றும், குறைந்த வருமானம் பெறுவோரும், பல்வேறு நோய் களால் பாதிக்கப்பட்ட மக்களும் இந்த மானியங்களை இழக்க அனுமதிக்க மாட்டோம் எனவும் அவர் தெரிவித்தார்.(நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலிகாம கல்வி வலயத்திற்குட்பட்ட கரப்பந்தாட்ட போட்டிகளில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி ஆதிக்கம்





வலிகாமம் கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளுக்கிடையிலான ஆண்களுக்கான கரப்பந்தாட்ட போட்டியில் சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி 16,20 வயது பிரிவுகளில் சம்பியன் கிண்ணத்தையும் 18 வயதுப் பிரிவில் இரண்டாமிடத்தையும் பெற்றுள்ளது.

வலிகாமம் கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளுக்கிடையிலான கரப்பந்தாட்ட போட்டிகள் அண்மையில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

16 வயதிற்குட்பட்ட ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து சுழிபுரம் விக்டோரியா கல்லூரி அணி மோதியது.

இதில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி அணி 25:16, 25:19 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று சம்பியன் கிண்ணத்தை கைப்பற்றினர்.18 வயதிற்குட்பட்ட ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து சுழிபுரம் விக்டோரியா கல்லூரி அணி மோதியது. இதில் பலத்த போராட்டத்தில் சுழிபுரம் விக்டோரியா கல்லூரி அணி 2:1 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்றது.20 வயதிற்குட்பட்ட ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து சுழிபுரம் விக்டோரியா கல்லூரி அணி மோதியது. இதில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி அணி 2:1 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்று சம்பியன் கிண்ணத்தை கைப்பற்றியது குறிப்பிடத்தக்கது. (6-90)

# சுப்பர் சிக்ஸ் சுற்றுக்குள்

## முதலாவதாகத் தகுதி பெற்ற நெதர்லாந்து

ஜிம்பாப்வேயில் நடைபெற்றுவரும் 10 நாடுகளுக்கு இடையிலான ஐ.சி.சி உலகக் கிண்ண தகுதி காண் சுற்றில் நேபாளத்தை வெளியேற்றி சுப்பர் சிக்ஸ் சுற்றுக்கு முதலாவது அணியாக நெதர்லாந்து தகுதி பெற்றது.

ஹராரே, ஹைபீல்ட் டக்காஷிங்கா விளையாட்டரங்கில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஏ குழுவுக்கான ஐ.சி.சி தகுதிகாண் சுற்றில் நேபாளத்தை 7 விக் கெட்டுகளால் வெற்றி கொண்ட நெதர்லாந்து 6 புள்ளிகளுடன் சுப்பர் 6 சுற்றுக்கு முன்னேறியது.

அப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய நேபாளம் 44.3 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 167 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது. துடுப்பாட்டத்தில் அணித் தலைவர் ரோஹித் பௌடெல் 33 ஓட்டங்களையும் சந்தீப் லமிச்சான் 27 ஓட்டங்களையும் பெற்றனர். பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய நெதர்லாந்து 27.1 ஓவர்களில் 3 விக்கெட்டுகளை இழந்து 168 ஓட்டங்களைப் பெற்று வெற்றியீட்டியது. ஆரம்ப விக்கெட்டில் விக்ரம்ஜித் சிங்குடன் 80 ஓட்டங்களைப் பகிர்ந்த மெக்ஸ் ஓ டவ்ட், 3ஆவது விக்கெட்டில் பஸ் டி லீட்டுடன் மேலும் 62 ஓட்டங்களைப் பகிர்ந்து அணியின் வெற்றியை இலகுபடுத்தினார்.(6)

# கலம்போ டென்னிஸ் போட்டி சம்பியனான சாஜிடா ராஸிக்



இலங்கை டென்னிஸ் சங்கத்தினால் நடத்தப்பட்டு வரும் 108ஆவது கலம்போ டென்னிஸ் சம்பியன்ஷிப் போட்டியில் பெண்கள் பகிரங்க ஒற்றையர் பிரிவில் சாஜிடா ராஸிக் சம்பியன் பட்டம் வென்றார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற பெண்கள் ஒற்றையருக்கான இறுதிப் போட்டியில் டினாரா டி சில்வாவை 2 - 1 என்ற செட்கள் வித்தியாசத்தில் வெற்றிகொண்டு சாஜிடா ராஸிக் சம்பியனானார்.

முதலாவ்து செட்டில் மிகத் திறமையாக விளையாடிய சாஜிடா ராஸிக் 6 - 4 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றிருந்தார்.

இரண்டாவது செட்டில் பதிலடி கொடுத்த டினாரா டி சில்வா 6 - 3 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்று செட்கள் நிலையை சமப்படுத்தினார்.

ஆனால், தீர்மானம் மிக்க 3 ஆவது செட்டில் அதிரடியை வெளிப்படுத்திய சாஜிடா ராஸிக் 6 - 1 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று சம்பியன் பட்டத்தை வென்றார். (6)

# மே.இந்திய தீவுகளை தகுதிச் சுற்றில் பஞ்சர் ஆக்கிய ஜிம்பாப்வே அணி

ஜிம்பாப்வேயில் நடைபெற்றுவரும் 10 நாடுகளுக்கு இடையிலான ஐ.சி.சி உலகக் கிண்ண தகுதிகாண் சுற்றில் ஏ குழுவில் நெதர்லாந்தை தொடர்ந்து ஜிம்பாப்வே, மேற்கிந்தியத் தீவுகள் ஆகிய அணிகளும் சுப்பர் 6 சுற்றில் விளை யாட தகுதி பெற்றுக் கொண்டன.

ஜிம்பாப்வேயுடனான போட்டியில் மேற்கிந்தியத் தீவுகள் தோல்வி அடைந்த போதிலும் அக் குழுவில் இடம்பெற்ற நேபாளமும் ஐக்கிய அமெரிக்காவும் ஏற்கனவே வெளியேற்றப்பட்டதால் இந்தத் தோல்வி மேற்கிந்தியத் தீவுகளுக்கு முதல் சுற்றில் பாதிப்பை ஏற்படுத்தவில்லை.

இப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய ஜிம்பாப்வே 49.5 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 268 ஓட்டங்களைப் பெற்றது.

ஜோய்லோர்ட் கம்பி (26), அணித் தலைவர் க்ரெய்க் ஏர்வின் (47) ஆகிய இருவரும் 63 ஓட்டங்களைப் பகிர்ந்து சிறப்பான ஆரம்பத்தை இட்டுக் கொடுத்தனர்.

சிக்கந்தர் ராஸா 68 ஓட்டங்களையும் ரெயான் பேர்ல் 50 ஓட்டங்களையும் சோன் வில்லியம்ஸ் 23 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் கீமோ போல் 61 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுகளையும் அல்ஸாரி ஜோசப் 42 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுகளையும் அக்கீல் ஹொசெய்ன் 45 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள் 44.4 ஓவர்களில் சகல விக்கெட்டு களையும் இழந்து 233 ஓட்டங்களைப் பெற்று தோல்வி அடைந்தது.

கய்ல் மேயர்ஸ் (56), ப்றெண்டன் கிங் (20) ஆகிய இருவரும் ஆரம்ப விக்கெட்டில் 6.3 ஓவர்களில் 43 ஓட்டங்களைப் பகிர்ந்தனர்.

மத்திய வரிசையில் ஷாய் ஹோப் (30), நிக்கலஸ் பூரண் (34), ரொஸ்டன் சேஸ் (44) ஆகிய மூவரே ஓரளவு திறமையை வெளிப்படுத்தினர்.

பந்துவீச்சில் டெண்டாய் சட்டாரா 52 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுகளையும் ரிச்சர்ட் எங் கராவா, ப்ளெசிங் முஸராபனி, சிங்கந்தர் ராஸா ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர். (6)

# மே. இந்திய டெஸ்ட் போட்டி குழாமில் இருந்து புஜாரா நீக்கம்



மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிராக கரீபியனில் நடைபெறும் இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடருக்கான இந்திய அணியில் இருந்து புஜாரா நீக்கப்பட்டுள்ளார்.

16 பேர் கொண்ட அணியில், ஐ.பி.எல் போட்டியில் சிறப்பாக விளையாடிய ஜேய்ஸ்வால், ருதுராஜ் கெய்க்வாட் மற்றும் முகேஷ் குமார் ஆகியோர் உள்வாங்கப்பட்டுள்ளனர்.

இந்திய அணி சார்பாக துடுப்பாட்டத்தில் 3 ஆவது இடத்தில் களமிறங்கி விளையாடும் 35 வயதான புஜாரா, 2020 முதல் 52 இன்னிங்ஸ்களில் 29.69 சராசரியை கொண்டுள்ளார். இரண்டு ஆண்டுகளில் புஜாரா நீக்கப்படுவது இது இரண்டாவது. முறையாகும். இறுதியாக 2022 ஆம் ஆண்டு இலங்கை அணிக்கு எதிரான தொடரில் இருந்தும் அவர் நீக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 286 பொருட்களுக்கான இறக்குமதிக் கட்டுப்பாடுகள் நீக்கம்

## நிதி இராஜாங்க அமைச்சர் அறிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் 286 பொருட்களுக்கான இறக்குமதிக் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டி தெரிவித்துள்ளார்.

மேலும் பல பொருட்களுக்கான கட்டுப்பாடுகளையும் படிப்படியாக முடிவுக்கு வருவதற்கு எதிர்பார்க்கின்றோம்.

இதனை அரசாங்கம் மிகவும் கவனமாகச் செய்து வருகின்றது.இலங்கை சுங்கத் திணைக்களத்தின் வருவாயை அதிகரிப்பதற்கு வாகனங்களை இறக்குமதிக்கு அனுமதி கோருகின்றனர்.

இருப்பினும், மத்திய வங்கியின் பொருளாதார ஆராய்ச்சிப் பிரிவு மற்றும் நாட்டின் தேவைகள் உட்பட ஒவ்வொரு துறையையும் கலந்தாலோசித்து, கடந்த ஐந்தாண்டுகளின் பதிவேடுகளைப் பார்த்து ஆண்டுக்கு செலவழிக்க வேண்டிய டொலர்களின் அளவையும் மதிப்பீடு செய்தோம்.

அனைத்து அம்சங்களையும் கருத்தில் கொண்டு, 286 பொருட்களின் இறக்குமதிக் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டன என அவர் தெரிவித்தார். (நி)

# விசேட மருத்துவர்களுக்கு பாரிய பற்றாக்குறை

## டிசெம்பரில் 250 சிறப்பு மருத்துவர்கள் ஓய்வு பெறும் அபாயம்

(கொழும்பு)

இவ்வருட இறுதிக்குள் அரச மருத்துவமனைகள் 750 விசேட மருத்துவர்களின் பற்றாக்குறையை எதிர்நோக்க நேரிடும் என சுகாதார அமைச்சின் வருடாந்த இடமாற்ற அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த ஆண்டு டிசெம்பரில் 63 வயதை பூர்த்தி செய்த 55 சிறப்பு மருத்துவர்கள் ஓய்வு பெற உள்ளனர்.

இந்நிலையில், 60 வயதில் ஓய்வு பெறும் சட்டம் மருத்துவர்களுக்கும் பொருந்தும் என்றாலும், டிசெம்பர் 31 ஆம் திகதி ஒரே நேரத்தில் 250 சிறப்பு மருத்துவர்கள் ஓய்வு பெறும் அபாயம் இருப்பதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (நி)

# மின் கட்டண திருத்தம் தொடர்பில் மக்கள் கருத்துகளை வழங்க வாய்ப்பு

(கொழும்பு)

மின்கட்டண திருத்தம் தொடர்பாக பொதுமக்களின் கருத்துகளைப் பெறுவதற்காக சிறப்பு பொது கலந்தாய்வு கூட்டம் நடத்தப்பட உள்ளதாக பொதுப் பயன்பாட்டு ஆணையகம் தெரிவித்துள்ளது.

இதன்படி, நாளை செவ்வாய்க்கிழமை பண்டாரநாயக்க மாநாட்டு மண்டபத்தில் மக்கள் கருத்தறியும் அமர்வு இடம்பெறவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்போது, மின் கட்டண உயர்வு அல்லது குறைப்பு தொடர்பாக பொது மக்கள் தங்கள் கருத்துக்களை தெரிவிக்க வாய்ப்பு உள்ளது.

தொழிற்சங்கங்கள் மற்றும் சிவில் அமைப்புக்கள் உட்பட எவருக்கும் இதற்கான கருத்துக்களை வழங்க முடியும் என பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அத்துடன், மின்சாரக் கட்டணம் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் ஆணைக் குழுவின் ஏனைய உறுப்பினர்களுக்கிடையிலான கலந்துரையாடல் இம்மாத இறுதிக்குள் இடம்பெறவுள்ளதாக பொதுப் பயன்பாடுகள் ஆணைக் குழுவின் புதிய தலைவர் பேராசிரியர் மஞ்சுள பெர்னாண்டோ தெரிவித்துள்ளார். (நி)

# உள்ளூராட்சி சபை வேட்புமனுக்களை இரத்து செய்ய நடவடிக்கை

(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள வேட்புமனுக்களை இரத்துச் செய்யும் யோசனை தொடர்பில் கலந்துரையாடல்களை ஆரம்பிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இது தொடர்பில் எதிர்வரும் சில வாரங்களில் ஜனாதிபதி மற்றும் பிரதமருடன் கலந்துரையாடவுள்ளதாக மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி இராஜாங்க அமைச்சர் ஜனக வக்கம்புர தெரிவித்தார்.

உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்காக சமர்ப்பிக்கப்பட்ட வேட்புமனுக்களை இரத்துச் செய்வது தொடர்பில் மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் ஆலோசனைக் குழுவில் யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய குறித்த பிரேரணை தொடர்பில் அரசியல் கட்சிகள் மற்றும் பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர்களுடனும் கலந்துரையாட திட்டமிடப்பட்டுள்ளது.

மேலும், தேர்தல் கால அவகாசம் காரணமாக வேட்புமனு தாக்கல் செய்த அரசு ஊழியர்களுக்கு பல்வேறு பிரச்சினைகள் உருவாகி உள்ளதால், அந்தந்த வேட்புமனுக்களை இரத்து செய்ய வேண்டும் என பலர் கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

இது தொடர்பில், பாராளுமன்றத்தில் விசேட தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட வேண்டும் எனவும் இந்த விடயம் தொடர்பில் சட்ட ஆலோசனைகளையும் பெற்றுக் கொள்ள அரசாங்கம் எதிர்பார்த்துள்ளதாகவும் இராஜாங்க அமைச்சர் ஜானக வக்கம்புர தெரிவித்துள்ளார். (நி)

# ரணிலுடன் கைகோர்க்குமாறு தமிழ்க் கட்சிகளுக்கு அழைப்பு

(கொழும்பு)

"அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவே பொதுவேட்பாளராகக் களமிறங்கவுள்ளார். எனவே, அவருடைய தலைமையின் கீழ் தமிழ்க் கட்சிகள் ஒன்றிணைய வேண்டும்" என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான வஜிர அபேவர்த்தன தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது,

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவில் உள்ளவர்களில் 90 வீதமானவர்கள் ரணில் விக்கிரமசிங்க வேட்பாளராகக் களமிறங்குவதையே விரும்புகின்றனர்.

ராஜபக்ஷக்களில் எவரும் ஜனாதிபதியாகவோ அல்லது பிரதமராகவோ வருவதை மக்கள் விரும்ப மாட்டார்கள். கடந்த வருடம் இடம்பெற்ற சம்பவங்களை எவரும் மறக்காமல் இருந்தால் நல்லது. ரணில் விக்கிரமசிங்கவைப் பலப்படுத்த அனைவரும் கட்சி வேறுபாடின்றி இணைய வேண்டும்." என அவர் தெரிவித்தார். (நி)

# இராசிபலன்

26.06.2023
ஆனி 11, திங்கட்கிழமை
அட்டமி முன்னிரவு 11.01 மணிவரை

உத்தரம் முற்பகல் 10.30 மணிவரை
சுபநேரம்-11.55-1.25 மணிவரை
இராகுகாலம்-7.25-8.55 மணிவரை

நடேசர் ஆனி உத்தர தரிசனம்
சந்திராஷ்டமம்-
அவிட்டம், சதயம்

வளவன்

**மேஷம்**
ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், நல்லவர்களின் அறிவுரையும் ஆதரவும் கிடைக்கும், குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும் நாள், கௌரவமான நாள்.

**கடகம்**
நேற்றைய பிரச்சினையொன்று இன்று நல்ல முடிவுக்கு வரலாம், வியாபார விருத்திக்கு வித்திடுவீர்கள், பொதுநல ஈடுபாட்டால் புகழ் பெறுவீர்கள்.

**துலாம்**
புண்ணிய காரியங்களுக்கு சிறிது செலவு செய்து மகிழ்வீர்கள், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்,சயன சுகக் குறைவுகள் ஏற்படலாம்.

**மகரம்**
ஏட்டிக்குப் போட்டியாக செயற்பட்டவர்கள் மனம் மாறுவர், நல்லவர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, வழிபாட்டால் குதூகலம் காண வேண்டிய நாள்.

**ரிஷபம்**
அரசு வழியில் அனுகூலமுண்டு, பூர்வீகச் சொத்து சம்பந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு, புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**சிம்மம்**
குடும்பத்தில் குதூகலம் கூடும், பேச்சில் இனிமை தென்படும், மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், சான்றோர்களின் சந்திப்பு இடம் பெறலாம்.

**விருச்சிகம்**
வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும், குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும் நாள், தொலைபேசி வழித்தகவல் மகிழ்ச்சி தரும், காரிய அனுகூலமுண்டு.

**கும்பம்**
மற்றவர்களிடம் பேசும் போது நிதானத்தைக் கடைப்பிடிப்பது நல்லது, விரயங்கள் மேலோங்கும் நாள், கடவுளை வழிபாட்டுக் காரியம் தொடங்க வேண்டிய நாள்.

**மிதுனம்**
இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், பொதுக் காரியங்களில் நாட்டம் கூடும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**கன்னி**
பணத்தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், குடும்பத்தினரை அனுசரித்துச் செல்வது நல்லது, கற்பனை மிகுதியான நாள், போசன சுகமுண்டு.

**தனுசு**
வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், பாதியில் நின்ற பணியை மீதியும் தொடர்வீர்கள், கொடுத்த வாக்கை காப்பாற்றி மகிழ்வீர்கள்.

**மீனம்**
உறவினர்களின் சந்திப்புக்கள் இடம்பெறும் வாய்ப்புண்டு, பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள்,எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும் வாய்ப்புண்டு.

பணம் கைக்கு வரும் முன்பே செலவுக்கு திட்டம் போடாதே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட வலைப் பந்தாட்ட சங்கத்தினால் எதிர்வரும் ஜூலை மாதம் 8,9 ஆம் திகதி, சனி, ஞாயி ற்றுக்கிழமை யாழ்.துரை யப்பா விளையாட்டு மைதா னத்தில் பெண்கள் சுழற்சிக் கிண்ணம் மற்றும் கலப்பு அணிக்கான சுழற்சிக் கிண்ணம் என நடை பெறவுள்ள வலைப்பந்தாட்ட போட்டிக்கான விண்ணப் பங்கள் கோரப்பட்டுள்ளன.

இச் சுற்றுப்போட்டிக்கு யாழ்.மாவட்டத்திலுள்ள பதிவு செய்த கழகங்கள் மற்றும் பதிவு செய்யப்படாத கழகங்களும் தமது பதி வினை மேற்கொண்டு எதிர் வரும் ஜூலை மாதம் 7 ஆம் திகதி வெள்ளிக்கிழ மைக்கு முன்னர் வலை ப்பந்தாட்ட சங்கத்தினரிடம் ஒப்படைக்க வேண்டும்.

வெள்ளிக் கிழமை மாலை 3 மணிக்கு யாழ் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் போட்டி நிரல் தயாரிக்கப்படுவதனால் பங்குபற்றவுள்ள அணியின் கழகத் தலைவர் அல்லது அணித்தலைவர் அல்லது அணி முகாமையாளர் அல் லது அணி சம்மந்தப்பட்ட ஒருவர் கட்டாயம் பங்குபற்ற வேண்டும் எனவும் அறி விக்கப்பட்டுள்ளது. (நி-6-90)

# வடக்கு கடலை ஆக்கிரமிக்கும் அட்டைப் பண்ணைகள்

(அராலி)

அட்டை பண்ணைகளுக்காக வடக்கு கடலின் ஆழம் குறைந்த பகுதிகளை சீனாவின் பினாமி நிறுவனங்கள் ஆக்கிரமிக்குமானால் எதிர்காலச் சந்ததியினருக்கு மீன்களை கண்காட்சி நிகழ்வுகளில் தான் காட்ட முடியும் என மெசிடோ நிறுவனத்தின் உத்தியோகத்தர் விவேகி தெரிவித்தார்.

நேற்று முன்தினம் யாழில் இடம்பெற்ற உலக வங்கியின் அறிக்கை தொடர்பான கடற் றொழில் சங்கப் பிரதிநிதிக ளுக்கு தெளிவுபடுத்தும் கலந் துரையாடலில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக் கையிலே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக் கையில், வடக்கில் வளமான கடற் பகுதிகளில் கடல் வேளா ண்மை என்ற பெயரில் அட்டை பண்ணைகள் விரிவுபடுத்தப் படுவதால் தற்போது அலங்கார மீன்கள் கண்காட்சிக்காக வைக்கப்படும் நிலையில் நாம் பாரம்பரியமாக கடல் உணவாக உண்டு வந்த மீன்களை மீன் கண்காட்சிகளில் தான் எமது எதிர்கால சந்ததியினருக்கு காட்ட வேண்டிய சூழ்நிலை உருவாகவுள்ளது.

இயற்கை நீரோட்டங்களை மறித்து கடல் அட்டைப் பண்ணைகள் அமைக்கப்பட்டு வருவதால் மீன் இனப்பெரு க்கம் குறைவடைந்துள்ள நிலையில் பிடிபடும் மீன்கள் வெளிநாடுகளுக்கும் ஆடம்பர விடுதிகளுக்கும் அனுப்பப்ப டுகிறது. வடபகுதியில் மட்டு மல்ல இலங்கையிலும் யாரும் உணவுத் தேவைக்காக பயன் படுத்தாத கடல் அட்டையை விற்பனை செய்து டொலரை பெறுவதாகக் கூறி அந்நிய நாட்டவர்களுக்கு எமது கடல் வளத்தை அழிக்க இடம் கொடுக்கக் கூடாது என தெரி வித்தார். (நி-6-104)

# சமூகச் சீர்கேடுகளைத் தடுப்பதற்கு பொதுஅமைப்புக்களின் பங்களிப்பு அவசியம்

## இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் மகேசன்

(சாவகச்சேரி)

சமூகச் சீர்கேடுகளை தடுத்து நிறுத்துவதில் சமூக மட்ட பொதுஅமைப்புக்க ளின் பங்களிப்பு மிக மிக அவசியமென யாழ்.மாவட்ட முன்னாள் அரசாங்க அதிப ரும் விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமை ச்சின் செயலாளருமான க.மகேசன் தெரிவித்து ள்ளார்.

அண்மையில் இடம் பெற்ற தென்மராட்சி-மட்டு வில் மோகனதாஸ் சன சமூக நிலையத்தின் 75 ஆவது ஆண்டு விழா நிக ழ்வில் பிரதம விருந்தின ராக கலந்துகொண்டு உரை யாற்றிய போதே மேற்படி அவர் தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கை யில் சமூக மட்ட அமைப்பு க்களில் பிரதானமானவை சனசமூக நிலையங்கள். அதற்கு அடுத்தபடியாக கிராம அபிவிருத்திச் சங் கங்கள் காணப்படுகின்றன.

சமூக மட்ட அமைப்பு க்கள் ஒற்றுமையாக செய லாற்றும் போது சமூகத்தில் காணப்படுகின்ற பல்வேறு பட்ட பிரச்சினைகளை உரிய முறையில் அணுகி தீர்வு காண முடியும்.

இவற்றை விட சமூக மட்டத்தில் போதைப்பொருள் பாவனை மற்றும் சமூக சீர்கேடுகள் பாரிய பிரச் சினைகளாக உள்ளன.இந்த விடயங்களை எதிர்கொள்ள சமூக மட்ட அமைப்புக்க ளின் செயற்பாடு மிக அவ சியம். வெறுமனே ஒரு திணைக்களத்தாலோ அல் லது தனிநபராலோ சமூகப் பிரச்சினைகளை கட்டுப்ப டுத்த முடியாது. அதனை கட் டுப்படுத்த அனைவரும் ஒன் றிணைய வேண்டும் எனத் தெரிவித்தார். (நி-6-30)



வலிகாமம் கல்வி வலய செயற்றிட்ட அலுவலர் ந.சண்முகராசாவினால் 100 பாடசாலைகளில் எவ்வித நிதிப் பங்களிப்பு இல்லாமல் மாணவர்களுக்கு நடத்தப்படும் கல்வி விழிப்புணர்வு செயற்றிட்டம் கடந்த 15 ஆம் திகதி வியாழக்கிழமை யா/ சங்கானை சிவப்பிரகாச இந்து ஆரம்ப பாடசாலையில் இடம்பெற்றது.

# ஏ-9 வீதியில் மினி பஸ்- ஹயஸ் வாகனம் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்து

## எட்டுப் பேர் மருத்துவமனையில்

(சாவகச்சேரி)

கொடிகாமம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட இராமாவில் பகுதியில் ஏ9வீதியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை மதியம் இடம்பெற்ற விபத்தில் 8பேர் படுகாயமடைந்துள்ளனர்.

யாழில் இருந்து கொடி காமம் நோக்கிச் சென்ற மினி பஸ்ஸுடன் கிளிநொச்சியில் இருந்து யாழ்.நோக்கி வந்த ஹயஸ் வாகனமும் மோதிய தில் இவ் விபத்து சம்பவித்து ள்ளது.

இதன்போது மினிபஸ் தடம்புரண்டு அதில் பயணித்த 



8 பேர் படுகாயமடைந்துள்ள னர்.இதில் மினிபஸ் சாரதியான நுணாவிலைச் சேர்ந்த 28 வயதான சயந்தன் மற்றும் மினிபஸ்ஸில் பயணம் செய்த கொழும்புத்துறையைச் சேர்ந்த 53 வயதான ஜீவகுமாரி, கொடி காமத்தைச் சேர்ந்த 29 வய தான கஜந்தன் ,வரணி யைச் சேர்ந்த 46 வயதான கமலா தேவி, கொடிகாமத்தைச் சேர்ந்த 37வயதான மயூரதன், வரணியைச் சேர்ந்த 36 வய தான நிசாந்தினி, இயற்றா லையைச் சேர்ந்த 37 வய தான யசிந்தா மற்றும் கொடி காமத்தைச் சேர்ந்த 56 வய தான உலகேந்திரன் ஆகி யோரே காயமடைந்த நிலை யில் சாவகச்சேரி ஆதார மரு த்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.இதில் இருவர் மேலதிக சிகிச்சை க்காக யாழ்.போதனா மருத்து வமனைக்கு அனுப்பி வைக்க ப்பட்டிருப்பதாக மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவிக்கின் றன.விபத்துத்தொடர்பான மேல திக விசாரணை களை கொடி காமப் பொலிஸார் முன் னெடுத்து வருகின்றனர்.(நி-6-30-33-104)

# சட்டவிரோத மணல் அகழ்வு; சந்தேகநபர் பிணையில் விடுதலை



(அராலி)

யாழ்.வடமராட்சி கிழ க்கில் சட்டவிரோதமாக மணல் ஏற்றிச் சென்ற உழவு இயந்திரத்துடன் சாரதியையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

நேற்று முன்தினம் குறி த்த கைது நடவடிக்கையை மருதங்கேணி பொலிஸார் முன்னெடுத்தனர். இதன் போது கைது செய்யப்பட்ட சந்தேகநபர் பொலிஸ் பிணையில் நேற்று முன் தினம் விடுவிக்கப்பட்டுள்ளார்.

எனினும் பறிமுதல் செய் யப்பட்ட உழவு இயந்திரம் மருதங்கேணி பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக் கப்பட்டுள்ளது. (நி-6-104)



இலங்கை தமிழரசுக் கட்சி யின் மறைந்த முன்னாள் பாரா ளுமன்ற உறுப்பினர் சட்டத் தரணி, ந.ரவிராஜின் 61 ஆவது பிறந்ததின நினைவு நிகழ்வு நேற்று ஞாயிற்றுக் கிழமை காலை சாவகச் சேரியில் அமைந்துள்ள அவரது உருவ ச்சிலை முன்பாக இடம் பெற் றது. (படம்- சுபேசன்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## சீமெந்து, டைல்ஸ், பெயின்ற்

# விலை குறைப்பு தொடர்பில் பேச்சுவார்த்தைகள் ஆரம்பம்

(கொழும்பு)

சீமெந்து, டைல்ஸ் மற்றும் பெயின்ற் விலை குறைப்பு தொடர்பில் சம்பந்தப்பட்ட நிறுவனங்களுடன் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்பொருட்களின் விலைகளை குறைத்து மக்களுக்கு நிவாரணம் வழங்க வேண்டும் என வர்த்தக மற்றும் உணவுப்பாதுகாப்பு அமைச்சர் நளின் பெர்னான்டோ தெரிவித்துள்ளார். (நி)

# இஸ்ரேலில் தாதியர் வேலைவாய்ப்பு; பணம் செலுத்தி ஏமாற வேண்டாம்

## வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் அறிவுறுத்தல்

(கொழும்பு)

இஸ்ரேலில் தாதியர் வேலைகளுக்காக எந்தவொரு வெளித்தரப்பினருக்கும் பணம் செலுத்த வேண்டாம் என இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகம் பொதுமக்களுக்கு அறிவித்துள்ளது.

இரு நாடுகளுக்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பிரகாரம், இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் ஊடாக மாத்திரமே இலங்கையர்களுக்கு இஸ்ரேலில் தாதியர் வேலைவாய்ப்புகள் உள்ளதாக பணியகம் தெரிவித்துள்ளது.

இஸ்ரேலில் வேலைவாய்ப்பு பெற்ற மற்றுமொரு குழுவினர் இன்று திங்கட்கிழமை இஸ்ரேல் செல்லவுள்ளனர்.

கடந்த ஏப்ரல் மாதம் 28ஆம் திகதி முதல் இஸ்ரேலில் தாதியர் துறையில் 389 இலங்கையர்கள் பணி அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுள்ளதாக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

# தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு புதிய உறுப்பினர்கள்

(கொழும்பு)

தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு தெரிவு செய்யப்பட்ட புதிய 5 உறுப்பினர்கள் தொடர்பான அறிக்கை எதிர்வரும் சில தினங்களில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் ஒப்புதலுக்காக அனுப்பி வைக்கப்படும் என சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தெரிவித்துள்ளார்.

அதற்கேற்ப தேர்தல்கள் ஆணைக் குழுவிற்கு புதிய உறுப்பினர்களை ஜனாதிபதி நியமிப்பார் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அண்மையில் கூடிய அரசியலமைப்பு சபை, தேர்தல் ஆணைக் குழுவிற்கு புதிய உறுப்பினர்களை தேர்வு செய்தது.

அதன்படி, அதன் தலைவராக முன்னாள் தேர்தல் ஆணையாளர் நாயகம் ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்கவை நியமிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன குறிப்பிட்டுள்ளார்.

இது தவிர, முன்னாள் தேர்தல் ஆணையாளர் நாயகம் எம்.ஏ.பி.சி பெரேரா, முன்னாள் சட்ட ஆலோசகர் ஜனாதிபதியின் சட்டத்தரணி தீபானி குமார ஜீவ, சட்டத்தரணி அமீர் பைஸ் மற்றும் பேராதனை பல்கலைக் கழகத்தின் அரசியல் விஞ்ஞானம் தொடர்பான கலாநிதி. ரமேஷ் ராமசாமி ஆகியோரின் பெயர்களும் ஆணைக் குழுவின் ஏனைய உறுப்பினர்களாக முன்மொழியப்பட்டுள்ளன.

இவர்களது பதவிக்காலம் உரிய முன்மொழிவுகள் தொடர்பில் ஜனாதிபதியின் அங்கீகாரத்தைப் பெற்ற பின்னர் 5 வருட காலத்திற்கு அமுலில் இருக்கும். (நி)


## பெறுகை அறிவித்தல்
## வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை, கரவெட்டி.

1. தலைவர், உள்ளூராட்சி மன்றப் பெறுகைக்குழு, வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபை, கரவெட்டி, வடமாகாணம் கீழ்க் காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட இணைப்புக்கள், உபகரணங்கள் வழங்குவதற்கு தகுதி வாய்ந்த விநியோகஸ்தர்களிடமிருந்து அரசுக்கு முத்திரையிடப்பட்ட விலைக்கேள்விகள் கோரப்படுகின்றன.

2. தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது.

3. கேள்வி பெறத் தகுதியுடையவராவதற்கு, வெற்றி பெறும் வழங்குநர்கள் கறுப்புப் பட்டியலில் **(Black List)** சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும் அத்துடன் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமாகவும் இருத்தல் வேண்டும்.

4. தேவையான தகைமைகள், கேள்வி ஆவணம் **பகுதி 4** இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

5. பொருத்தமான மற்றும் ஆர்வமுள்ள வழங்குநர்கள் இதற்கான ஆங்கில மொழியிலான பூரணமான கேள்வி ஆவணமொன்றை **தலைவர், உள்ளூராட்சி மன்றப் பெறுகைக்குழு, வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை, கரவெட்டி** எனும் இடத்தில் **26 ஜூலை 2023** ஆம் திகதியிலிருந்து **17 ஜூலை 2023** வரை காலை 9.00 மணிக்கும் 14.00 மணிக்கும் இடையில் பார்வையிடவும், மீளளிக்கப்படாத கட்டணமாக **ரூபா 2000/-** செலுத்திப் பெற்றுக் கொள்ள முடியும். மேலும் எமது அலுவலக தொலைபேசி/தொலைநகல் இலக்கம் 021-226-3271, e.mail - vadaswps@gmail.com என்பன ஊடாகவும் மேலதிகத் தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

6. கிடைக்கப் பெற்ற விலைக்கேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது விலைக் கேள்வியின் ஒரு பகுதியினை மட்டும் ஏற்றுக் கொள்வதற்கு அல்லது இப் பெறுகையை முழுமையாக இரத்துச் செய்வதற்கு பெறுகைக்குழுவிற்கு அதிகாரமுண்டு.

7. விண்ணப்பங்கள் யாவும் இரு பிரதிகளில் தயாரித்து **தலைவர், உள்ளூராட்சி மன்றப் பெறுகைக்குழு, வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபை, கரவெட்டி** எனும் முகவரிக்கு **18 ஜூலை 2023** ஆம் திகதி **மு.ப 10.00** மணிக்கு முன்பதாகக் கிடைக்கக் கூடியதாக நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ அனுப்பி வைக்கப்பட வேண்டும். கேள்வி நேரம் முடிவடைந்தவுடன் கேள்வி திறக்கப்படும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும்.

8. கேள்வி திறத்தலிற்கு கேள்விதாரர் அல்லது அவரது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்க முடியும்.
கேள்வி விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்படும் **இறுதித் திகதியிலிருந்து 49 (நாற்பத்து ஒன்பது) நாட்கள் (05.09.2023)** வரை செல்லுபடியாகும்.

9. கேள்விப் பிணை வைப்புத்தொகையானது கீழ் அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.


10. தெரிவு செய்யப்பட்ட வழங்குநர்கள் தலைமை அலுவலகம், வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை, கரவெட்டி எனும் இடத்தில் பொருட்களை விநியோகிக்க வேண்டும்.

| ஒப்பந்த இலக்கம் | விவரம் | எண்ணிக்கை | ஒப்பந்த காலம் | மீளளிக்கப்படாத கட்டணம் | கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | மீளளிக்கும் பிணைப் பணம் | செல்லுபடியாகும் காலம் |
| NP/14/41(12)/FD/45/2023(sho21) | Photocopier with Stand | 03 | 01 மாதம் | 2000.00 | 20,000.00 | 03.10.2023 |

**தலைவர், உள்ளூராட்சி மன்றப் பெறுகைக்குழு,**
**வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபை,**
**கரவெட்டி.** **26.06.2023.**
(C-6815)



# மணிவிழா வாழ்த்து




**திரு.மயில்வாகனம் நவரட்ணம்**

யாழ்ப்பாணம் பொதுசன நூலகத்தில் எம்முடன் 14 வருடங்களுக்கு மேலாக சிறப்பாகப் பணியாற்றி இன்று தனது 60 ஆவது அகவையில் ஓய்வு பெற்றுச் செல்லும் திரு.மயில்வாகனம் நவரட்ணம் அவர்களுக்கு பிறந்தநாள் வாழ்த்துக்களைத் தெரிவிப்பதோடு அவர் தனது ஓய்வுக் காலத்தில் சீரும் சிறப்புடனும் உள, உடல் ஆரோக்கியத்துடனும் இருக்க எல்லாம் வல்ல இறைவனை வேண்டி வாழ்த்தி நிற்கின்றோம்.

(16054)

வாழ்த்துவோர்:-
**யாழ்.பொதுசன நூலக ஊழியர் நலன்புரிச்சங்கம்.**



# மணிவிழா வாழ்த்து



செல்வி.
**சோமசுந்தரம் சுசிலா**

யாழ்ப்பாணம் பொதுசன நூலகத்தில் எம்முடன் 25 வருடங்களுக்கு மேலாக சிறப்பாகப் பணியாற்றி இன்று தனது 60 ஆவது அகவையில் ஓய்வு பெற்றுச் செல்லும் செல்வி.சோமசுந்தரம் சுசிலா அவர்களுக்கு பிறந்தநாள் வாழ்த்துக்களைத் தெரிவிப்பதோடு அவர் தனது ஓய்வுக்காலத்தில் சீரும் சிறப்புடனும் உள, உடல் ஆரோக்கியத்துடனும் இருக்க எல்லாம் வல்ல இறைவனை வேண்டி வாழ்த்தி நிற்கின்றோம்.

வாழ்த்துவோர்:-
**யாழ்.பொதுசன நூலக ஊழியர் நலன்புரிச்சங்கம்.**

(16054)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முகநூல் தரிசனம் 151

### ஊழல் மோசடியில் ஈடுபட்ட தொழிலதிபருக்கு மன்று அளித்த தீர்ப்பு



ஒரு பெரிய மென்பொருள் நிறுவனத்தின் நிர்வாகி நான்காயிரம் கோடி ரூபாய் ஊழல் செய்ததாகக் குற்றம் சுமத்தப்பட்டு நீதிபதி முன் ஆஜர்படுத்தப்பட்டார்.

நீதிபதிக்கு அவரைப் பார்க்கவே பரிதாபமாக இருந்தது.

"காலையில் உங்களுக்கு உணவு ஏதாவது கொடுத்தார்களா எனக் கேட்க"இல்லை" என்று தலையாட்டினார் நிர்வாகி. நீதிமன்ற ஊழியரிடம் நான்கு இட்லி வாங்கி வருமாறு ஆணையிட்டார்.

இயக்குநரின் கையில் இட்லிப் பொட்டலம் கொடுக்கப்பட்டது.

"பரவாயில்லை. இங்கேயே சாப்பிடுங்கள். அதற்குள் நான் இன்னொரு வழக்கு விசாரணையை முடித்து விடுகிறேன்."

அந்த நிர்வாகியால் மூன்று இட்லிக்கு மேல் சாப்பிடவே முடியவில்லை. பேந்தப் பேந்த விழித்தபடி நின்று கொண்டிருந்தார்.

"என்ன ஒரு இட்லியை வைத்து விட்டீர்கள்? அதையும் சாப்பிட்டுவிடுங்கள்." என நீதிபதி கூறினார்.

"முடியவில்லை ஐயா... என்னால் சாப்பிட முடியவில்லை." "பார்த்தீர்களா? உங்களால் சாப்பிட முடிந்தது மூன்று இட்லி தான். அதற்கு மேல் உங்கள் வயிற்றில் இடமில்லை. இதற்காகவா நீங்கள் நான்காயிரம் கோடி ரூபாய் ஊழல் செய்தீர்கள்? மனிதனின் அத்தியாவசியத் தேவைகள் மிகவும் குறைவானவை.

அகந்தையின் தேவைகள் தான் அதிகம். உங்கள் வயிற்றுக்குத் தீனி போடுவது எளிது. அதற்கு நான்கு இட்லியே அதிகம். உங்கள் அகந்தைக்கு... நான்காயிரம் கோடி என்ன... நாற்பதாயிரம் கோடி கூடப் போதாது.."

இயக்குநர் பெரிதாக அழ ஆரம்பித்தார்.அவர் மீதம் வைத்த அந்த நான்காவது இட்லி அவருக்கு மட்டும் இல்லை. நமக்கும் பல மகத்தான பாடங்களைச் சொல்லிக் கொடுக்கிறது.

"தெண்கடல் வளாகம் பொதுமை இன்றி
வெண்குடை நிழற்றிய ஒருமையோர்க்கும் நாடுநாள்
யாமத்தும் பகலும் துஞ்சான்
கடுமாப் பார்க்கும் கல்லா ஒருவற்கும்
உண்பது நாழி உடுப்பவை இரண்டே"

என்று ஒரு புறநானூற்றுப் பாடல் சொல்கிறது.

தென் தமிழகத்தையே ஒரு குடையின் கீழ் ஆளும் மன்னனுக்கும் பகலிலும் இரவிலும் தூங்காமல் விலங்குகளைப் பார்த்துக் கொண்டிருக்கும் படிக்காத ஒரு வேடனுக்கும் உண்பதற்குத் தேவை கால் படி உணவு, மற்றும் உடைகள் என்பது இதன் பொருள்.

மூர்க்கத்தனமாகப் பொருட்களைச் சேகரிக்கும் முட்டாள்த்தனத்தை விட்டு விடுங்கள்.

கொண்டு போக முடியாத பொருளைச் சேர்ப்பதை விட இருப்பதைப் பகிர்ந்து கொள்வோம். இந்த உலகம் நமக்குப் பயன்பட்டதைப் போல், வருங்காலத்தில் வருபவர்களுக்கும் பயன்பட வேண்டும். நாம் நுழைந்த போது இருந்ததை விட, இன்னும் சிறப்பான நிலையில் இந்த உலகத்தை விட்டுவிட்டு மேலே செல்வோம். இப்படிச் செய்தால், நம் உள்ளங்களில் மட்டுமல்ல எதிர்காலச் சந்ததியின் இதயங்களிலும் மகிழ்ச்சி மலரும்.

அன்பு வாசகர்களே!
முகநூலில் உங்கள் மனதைத் தொடும் பதிவுகளை வலம்புரியின் "முகநூல் தரிசனம்" பகுதிக்கு உங்கள் பெயரைக் குறிப்பிட்டு Valampurii Seithy எனும் வலம்புரி முகப் புத்தகத்திற்கு Share செய்யுங்கள் அல்லது 076 636 3378 எனும் viber இலக்கத்திற்கு அல்லது valampurii@yahoo.com எனும் E-Mail இற்கு அனுப்பி வையுங்கள்.

## ஐரோப்பாவின் வெப்பநிலை இரு மடங்கு அதிகரிப்பு

### ஐக்கிய நாடுகள் சபை தெரிவிப்பு

(ஜெனிவா)

1980 முதல், ஐரோப்பா சராசரி விகிதத்தை விட இரண்டு மடங்கு வெப்பமடைந்து வருகிறது என்று ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

உலக வானிலை ஆய்வு மையம் மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் கோப்பர் நிகஸ் காலநிலை மாற்ற அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில், 2022 ஆம் ஆண்டு அதிக வெப்பநிலை பதிவான ஆண்டாக குறிப்பிடப்பட்டுள்ளது.


பெல்ஜியம், பிரான்ஸ், ஜேர்மனி, அயர்லாந்து, இத்தாலி, லக்சம்பர்க், போர்த்துக்கல், ஸ்பெயின், சுவிட்சர்லாந்து மற்றும் பிரித்தானியா ஆகிய நாடுகள் கடந்த ஆண்டை தமது அதிக வெப்பமான ஆண்டாக பதிவு செய்துள்ளன. (நி)

## ரஷ்யாவின் வோரோனேஜ் நகரில் எரிபொருள் கிடங்கில் தீ விபத்து

(மொஸ்கோ)

ரஷ்யாவின் வோரோனேஜில் எண்ணெய்க் கிடங்கில் தீ விபத்து இடம்பெற்றுள்ள நிலையில் 100 இற்கும் மேற்பட்ட தீயணைப்பு வீரர்கள் சம்பவ இடத்திற்கு விரைந்துள்ளனர்.

சம்பவத்தில் 100 தீயணைப்பு வீரர்கள் மற்றும் 30 இற்கும் மேற்பட்ட வாகனங்கள் உள்ளன என்றும் ஆளுநர் அறிவித்துள்ளார்.



தீ விபத்துக்கான காரணம் வெளியாகவில்லை, ஆனால் சில ஊடகங்கள் வெடிப்புக்கு முன்னர் இராணுவ ஹெலிகாப்டர் அப்பகுதியில் இருப்பதைக் காட்டும் வீடியோவை வெளியிட்டுள்ளன. (நி)

### சீன ஆய்வகத்தில்

## கொரோனா உருவாக்கப்பட்டதற்கான ஆதாரங்கள் எதுவும் இல்லை

### அமெரிக்க உளவுத்துறை தகவல்

(வோஷிங்டன்)

சீனாவின் ஆராய்ச்சி மையத்தில் கொரோனா வைரஸ் உருவாக்கப்பட்டமைக்கான ஆதாரங்கள் எதுவும் இல்லை என்று அமெரிக்க உளவுத்துறை அறிக்கை வெளியிட்டுள்ளது.

அந்நாட்டின் வூஹான் ஆராய்ச்சி மையத்தில் பயோ வெப்பனாக கொரோனா வைரஸ் உருவாக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

அத்துடன், அதனை உருவாக்கிய விஞ்ஞானிகளில் 3 பேருக்கு வைரஸ் பரவியதாகவும் தகவல்கள் வெளியாகியது.

அதனால், அது குறித்த உண்மைத் தன்மையை கண்டறிவதற்காக அமெரிக்க பாராளுமன்றம் அமெரிக்காவின் உளவுத்துறை வலியுறுத்தியது.

அதையடுத்து, அந்த முயற்சியில் அமெரிக்காவின் உளவுத்துறை ஈடுபட்டது.

இந்நிலையில், அந்த விசாரணையில் சீன ஆராய்ச்சி மையத்திலிருந்து கொரோனா வைரஸ் பரவியதற்கான எந்த ஆதாரமும் இல்லை என தெரியவந்துள்ளதாக அமெரிக்கா குறிப்பிட்டுள்ளது.

அது மட்டுமன்றி, சீன ஆய்வகத்தில் விஞ்ஞானிகளுக்கு கொரோனா வைரஸிற்கான அறிகுறிகள் காணப்பட்ட போதிலும், அவர்கள் அந்த வைரஸை உருவாக்கினார்களா? அல்லது இல்லையா? என்பது குறித்து உறுதியாக கூற முடியவில்லை என்றும் அமெரிக்கா தெரிவித்துள்ளது.

மேலும், வுஹான் ஆய்வகம், பொது சுகாதாரத் தேவைகளுக்காக மக்கள் விடுதலை இராணுவத்துடன் (பிஎல்ஏ) இணைந்து நோய்க்கிருமி ஆராய்ச்சி மற்றும் தடுப்பூசி உருவாக்கம் செய்ததாகவும் அமெரிக்க உளவுத்துறையின் அறிக்கையில் கூறப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

## அதிகமான வெப்பநிலை பதிவாகியுள்ள போதிலும் 20 லட்சத்திற்கும் மேற்பட்டோர் மக்காவில்

(ஜெத்தா)

சவுதி அரேபியாவில் அதிகமான வெப்பநிலை பதிவாகியுள்ள போதிலும் 20 லட்சத்திற்கும் அதிகமானவர்கள் புனித நகரான மக்காவில் ஒன்று கூடியுள்ளனர்.

சர்வதேச ரீதியாக, யாத்திரிகர்கள் தொடர்ந்தும் விமானங்கள் மற்றும் பயணிகள் பேருந்துக்கள் மூலம் வந்த வண்ணம் உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.புனித ஹஜ் நெருங்கி வரும் நிலையில் சவுதி அரேபியா வரலாற்றில் மிகப் பெரிய இஸ்லாமியர்கள் கூடும் நிகழ்விற்கு தயாராகி வருவதாக ஹஜ் மற்றும் உம்ரா அமைச்சர் தவ்பிக் அல் ரபியா தெரிவித்துள்ளார்.இதேவேளை, 160 இற்கும் அதிகமான நாடுகளை சேர்ந்த 20 லட்சத்திற்கும் அதிகமான யாத்திரிகர்கள் வருகை தருவதாக குறிப்பிடப்பட்டுள்ளது.



கடந்த வருடத்தை விட இந்த முறை 9 லட்சத்து 26 ஆயிரம் யாத்திரிகர்கள் அதிகமாக வருகை தந்துள்ளதாக புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

# சர்க்கரைக் கொல்லி மூலிகையும் மாற்று மூலிகையும்



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

ஆயிரக்கணக்கான மூலிகைகளை சித்தர்கள் மருந்துகள் தயாரிப்பதற்காகப் பயன்படுத்தியுள்ளார்கள்.

மூலிகைகளை அவற்றின் குணங்களுக்கேற்ப (Property) நோய்களை சிகிச்சிப்பதற்காகப் பயன்படுத்தியுள்ளார்கள். அதே போன்று குணங்களை அடிப்படையாகக் கொண்டே மூலிகைகளின் வகைகளையும் வகுத்துள்ளார்கள்.

அந்த வகையில் சர்க்கரை கொல்லி எனும் மூலிகை நீரிழிவு அல்லது மதுமேக நோவை கட்டுப்படுத்துவதில் முக்கிய இடம் வகிக்கின்றது.

**சர்க்கரை கொல்லி / சிறுகுறிஞ்சா**

தாவரவியற்பெயர் :- Gymnema sylvestre
குடும்பம் :- Asclepiadaceae
Eng Name: Sugarkiller

இது இந்தியாவில் மேற்கு தொடர்ச்சி மலை மற்றும் கிழக்குத் தொடர்ச்சி மலை அடிவாரக் காடுகளில் மற்றத் தாவரங்கள் மீது பற்றி வளரும் ஏறு கொடியாகும்.

இலங்கையில் இயற்கையாக வளரக் கூடியது அல்ல. கல்துமுல்ல மூலிகை தோட்டத்தில் இனங்காணுவதற்காக வளர்த்து பராமரிக்கப் படுகின்றது.

ஆனால் இலங்கையில் சிறுகுறிஞ்சா எனும் பெயருடன் பயன்படும் மூலிகை குறிஞ்சான் ஆகும் . அதனுடைய,தாவரவியற்பெயர்: Gymnema lactiferum
குடும்பம் - Asclepiadaceae

இரண்டு இனங்களும் உருவவியல் ரீதியாக ஒரே அமைப்பை கொண்டிருந்த போதும் சர்க்கரைக் கொல்லி மூலிகையின் இலைகளில் மென்மையான ரோமங்கள் காணப்படும். அதன் நரம்புகளும் கடும் மண்ணிறம் உடையவையாக இருக்கும்.

சர்க்கரைக் கொல்லி மூலிகை அதாவது இதனுடைய இலைகளை நன்கு கழுவி சிறு துண்டுகளாக அரிந்து வாயிலிட்டு மென்று பிறகு சீனியைச் சாப்பிட்டால் இனிப்புச் சுவை தெரிவதில்லை. இதனுடைய இலையில் Gymnemic Acid எனும் வேதியற்பொருள் உள்ளது. இது தவிர ஆந்



ரோகுயினைன் கிளைக் கோசைடு எனும் வேதியற் பொருளும் உள்ளது.

இதன் இலைகளை தனி மருந்துப் பொருளாக (Single Drug) நீரிழிவு நோயை கட்டுப்படுத்தப் பயன்படுத்தப்படுவதில்லை. ஆனால் நீரிழிவு எனப்படும் மதுமேக நோயை கட்டுப்படுத்தும் மற்ற மூலிகைகளுடன் சேர்த்துப் பயன்படுத்தப்படுகின்றது.

சர்க்கரைக் கொல்லி மற்றும் குறிஞ்சான் மூலிகைகள் அடங்கும் Asclepiadaceae குடும்பத்தில் 280 பேரினங்களும் 1200 சிற்றினங்களும் அடங்கும். பெரும்பாலும் சிறுசெடிகள், பெருஞ்செடிகள், ஏறுகொடித்தாவரங்களாகும். தண்டு, இலை இவைகளின் உட்புற திசுவில் (லேட்டக்ஸ்) பால் சுரக்கும் திசுக்குழாய்கள் உள்ளன.

மதுமேக நோயைக் கட்டுப்படுத்த சிறுகுறிஞ்சா இலைகளை நிழலில் உலர்த்தி அதேஅளவு நாவற்கொட்டை விதைகளை நிழலில் உலரத்திப் பொடித்து இரண்டு பொடிகளையும் கலந்து அரித்து வைத்துக் கொள்ள வேண்டும். காலை, மாலை ஒரு தேக்கரண்டியளவு எடுத்து வர மதுமேக நோய் கட்டுப்படும். சிறு குறிஞ்சா இலை மட்டுமல்ல அதன் முழுக்கொடி வேர் அனைத்தும் மருத்துவத்தில் பயன்படுத்தப்படுகிறது.

**சரக்கரைக் கொல்லி இலை (Cumnema sylvestre leaves)**

“கரப்பான் கிரந்தி கூடிய விரும லூரப்பாம் விஷ பாக மோட்டு நிரைப்பான அக்கரத்தை மாற்றி விடு மாயிழையே பித்தமுமாந்தக்க குறிஞ்சா வினிலை தான்"

கரப்பான், கிரந்தி, சிரங்கு, இருமல், விஷேபாவம், வாய்ப்புண் இவற்றை நீக்கும்

**சர்க்கரை கொல்லி முழுக்கொடி:-**

"சிறுகுறிஞ்சா வாதமொரு சீரத்தை நீக்கும் மறுவுதிரமில்லாத மாதர்க்கு குறுமுலகி லத்தி சுரமுமகலாக் கடிவிட முந்தத்தியக லத்தகரக்குத்தான்"

"வாத சுரஞ் சந்திசுர மாறாக் கபசுரமும் பூதலம் விட்டோடப் புரியுங் காண் மாதே கேளக்கர நோய் திர்க்கு மதிசுரந் தாகம் போக்குந் தக்க சிறுகுறிஞ்சா தான்"

வாதநோய், சீதபேதி, மாதாந்த உதிரச்சிக்கல், அஸ்தி சுரம், விஷக்கடி, வாதசுரம், கபசுரம், தாகம், நீர் வேட்கையை நீக்கும் .

மாதவிடாய் காலத்தில் இரத்தப்போக்கு சீராக இல்லாவிடில் சிறுகுறிஞ்சா இலைகளை சிவத்த பச்சரிசியை நனைய விட்டு வடித்து இடித்து சிறுகுறிஞ்சா இலைகளையும் சேர்த்து இடித்து அரித்து அந்த மாவில் களி, பிட்டு தயாரித்து உட்கொள்ள மாத்விடாய் கால உதிர-சிக்கல் நீங்கும். சிறுகுறிஞ்சா வேரினால் நஞ்சுகள், வாத சுரம், இருமல் ஆஸ்மா இவை நீங்கும்.

"சிறுகுறிஞ்சான் வேர் விடத்தைத் தீர்க்கும். அனிலத் துருசுரங்கள் வாதம் ஒழிக் குந் தெறிபாணக் கண்ணாய்!
இருமல் முதற் காச சுவா சந் தணிக்கும்
விண்ணொடுக்கி தனை விள்".

ஆனாலும் இலங்கையில் பெரும்பாலும் சர்க்கரைக் கொல்லி பயன்படுத்தப்படுவதில்லை. ஏனெனில் கிடைப்பது அரிதாகும்.

மேற்கூறிய மருத்துவப் பண்புகள் அனைத்தும் சர்க்கரைக் கொல்லி இனத்திலே தான் இருக்கும். எனினும் குறிஞ்சாவிலும் ஓரளவு மருத்துவப் பண்புகள், அதன் சுவை, தன்மை, வீரிய, விவாக அடிப்படையில் இருப்பதால் பதில் மூலிகையாகப் பயன்படுகின்றது.

**சூப்**

தேவையானவை

1.சர்க்கரை கொல்லி இலை/ மாற்று மூலிகை இலை-1கைப்பிடி
2. தக்காளி -50 கிராம்
3.சின்ன வெங்காயம்-7
4.கறிவேப்பிலை- 1நெட்டு
5. செத்தல் மிளகாய்-1
6. உப்பு-தேவையான அளவு
7.மிளகு-ஒரு தே.க
8.சீரகம்-ஒரு தே.க
9.சோம்பு./இஞ்சி- 1/2 தே.க
10.மல்லி- 3 தே.க
11. பூண்டு- 5 பல்



**செய்முறை:-**

1.மிளகு, சீரகம், இஞ்சி, மல்லி, பூண்டு, செ. மிளகாய், உப்பு இவற்றை நன்கு அரைக்கவும்.
2.சி.வெங்காயம்,தக்காளி, கறிவேப்பிலை, சிறு குறிஞ்சா துப்பரவாகக் கழுவி சிறு துண்டுகளாக வெட்டவும்.
3.அரிந்த சிறுகுறிஞ்சா இலைகளை சேர்த்து கொதிக்க வைக்கவும். நறுக்கிய வெங்காயம், தக்காளி, கறிவேப்பிலை சேர்க்கவும்
4.அரைத்து வைத்தவற்றை ஒன்று சேர்க்கவும்.
5.இறுதியாக வெந்ததும் கறிவேப்பிலையை இட்டு இறக்கி பரிமாறவும்.

**சிறுகுறிஞ்சா ரொட்டி**

சிறுகுறிஞ்சா இலை-100 கிராம்.
கோதுமை அரிசி மா-250கிராம்.
உப்பு-தேவையான அளவு.
செத்தல் மிளகாய்-5
சீரகம்- சிறிதளவு.

சிறுகுறிஞ்சா இலைகளை சிறுதுண்டுகளாக அரிந்து மிளகாய், சீரகத்தை விழுத்தாக அரைத்து இலை-அனைத்தையும் கோதுமை அரிசி மாவோடு சேர்த்து ரொட்டிக்கு மா பிசையும் பதத்தில் பிசைந்து கொள்ளவும். 2 மணி நேரம் கழித்து ரொட்டி செய்து சாப்பிடவும். நீரிழிவு நோயாளர்களுக்கு உகந்த உணவு. மலத்தையும் இளக்கி வெளியேற்றும்.

**சிறுகுறிஞ்சா சேர் பிட்டு**

வறுத்த அரிசிமா - 1 சுண்டு.
தேங்காய்த் துருவல்- 1/4 சுண்டு.
கடலைமா-2 மேசைக் கரண்டி.
இலை-இரண்டு பிடி.
பச்சை மிளகாய், வெங்காயம், உப்பு அளவாக.

வறுத்த அரிசிமாவுடன் உப்புக் கரைசலாக்கிய வெந்நீர் விட்டு குழைத்து இலை வகையை சிறு குறுநல்களாக வெட்டி எடுத்து அத்துடன் தேங்காய்த் துருவலையும் குழைத்து மாவுடன் சேர்த்து நன்றாகச் சேர்த்தெடுத்தல். இவற்றுடன் குறுகலாக்கிய வெங்காயம், பச்சை மிளகாய் முதலியவைகளையும் சேர்த்துக் கொள்ள வேண்டும். இவ்விதம் ஒன்று சேர்த்து குழைத்த மாவை சிறுசிறு துணிக்கைகள் ஆக்கி பிட்டாக அரித்து எடுக்க வேண்டும். இது ஓர் நிறையுணவாக அமையும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதவித்திட்ட கொடுப்பனவில் முறைகேடு
# வவுனியா தோணிக்கல் மக்கள் போராட்டம்

(குருமன்காடு)

**வவுனியா தோணிக்கல் கிராம சேவையாளர் பிரிவில் நலன்புரி உதவித்திட்ட கொடுப்பனவு தெரிவில் முறைகேடுகள் இடம்பெற்றுள்ளதாகவும், இரு நேரம் மட்டும் உணவு உண்டு வாழும் குடும்பங்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்து கிராம மக்கள் நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.**

அரசாங்கத்தினால் நலன்புரி உதவித்திட்ட கொடுப்பனவுகள் வழங்குவதற்கான பெயர்ப்பட்டியல் அண்மையில் வெளிவந்திருந்த நிலையில் வவுனியா தோணிக்கல் கிராம சேவையாளர் பிரிவில் வசிக்கும் இரு நேரம் உணவு உண்டு வாழும் குடும்பங்கள், விசேட தேவைக்குட்பட்டவர்கள், முதியோர்கள், விதவைகள் உட்பட்ட வறுமைக்கோட்டிற்கு உட்பட்டவர்களின் பல பெயர்கள் உள்வாங்கப்படாமல் வெளிநாடுகளில் இருப்போர் மற்றும் வசதியானவர்களுக்கே கொடுப்பனவுகள் வழங்கப்படவுள்ளதாக தெரிவித்து பாதிக்கப்பட்ட கிராம மக்கள் குறித்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். (நி-6-250)



# வீதித்தடையை ஏற்படுத்தி நெல் உலர வைப்பு

## தனிநபரின் செயற்பாட்டால் போக்குவரத்து பாதிப்பு

(குருமன்காடு)

வவுனியா, நெளுக்குளம், நேரியகுளம் பிரதான வீதியிலிருந்து சின்னத்தம்பனை ஊடாக செட்டிகுளம் - உலுக்குளம் பிரதான வீதிக்கு செல்லும் காபட் வீதியில் தனிநபர் ஒருவர் வீதித்தடையினை ஏற்படுத்தி வீதி முழுவதுமாக ஆக்கிரமித்து நெல் உலர வைத்துள்ளமையினால் அப்பகுதியூடான போக்குவரத்து முற்றாக பாதிப்படைந்துள்ளதாக மக்கள் தெரிவித்துள்ளனர்.

காலபோக நெல் அறுவடை ஆரம்பித்துள்ள நிலையில் அறுவடை செய்த நெல்லை உலர வைப்பதற்கான போதியளவு உலரவிடும் தளம் இன்மையால் வருடா வருடம் காபற் வீதிகளில் நெல் உலர விடும் அவலம் தொடர்கின்றமை வழமை.

எனினும் சின்னத்தம்பனை ஊடாக செட்டிகுளம் - உலுக்குளம் பிரதான வீதிக்கு செல்லும் காபட் வீதியில் தனிநபர் ஒருவர் வீதித்தடையினை ஏற்படுத்தி வீதி முழுவதுமாக ஆக்கிரமித்து நெல் உலர வைத்துள்ளமையினால் அப்பகுதியூடான போக்குவரத்து முற்றாக பாதிப்படைந்துள்ளதுமையுடன் மக்கள் மாற்று வீதியூடாக செல்ல வேண்டிய நிலைமைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

எனவே இவ்விடயத்தில் செட்டிக்குளம் பொலிஸ் நிலைய போக்குவரத்து பிரிவினர் கவனம் செலுத்தி மக்களின் போக்குவரத்திற்கு இடையூறு இல்லாத வகையில் பாதையில் நெல்லை உலர வைக்க பணிக்குமாறும் அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (நி-6-250)

# கோப்பாய் கலாசாலை நூற்றாண்டு விழாவை முன்னிட்டு சிநேகபூர்வ விளையாட்டு போட்டி


(யாழ்ப்பாணம்)

.கோப்பாய் ஆசிரிய கலாசாலை நூற்றாண்டையொட்டி கலாசாலைக்கும் யாழ்.தேசிய கல்வியியல் கல்லூரிக்கும் இடையிலான சிநேகபூர்வ விளையாட்டுப் போட்டி நிகழ்வு நாளை செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிக்கு கலாசாலை மைதானத்தில் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

இரு கல்லூரிகளதும் உடலாளர் மன்ற ஏற்பாட்டில் தேசிய கல்வியியல் கல்லூரி பீடாதிபதி சு.பரமானந்தம், ஆசிரிய கலாசாலை அதிபர் ச.லலீசன் ஆகியோரது இணைத் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். கல்வி வலயப் பணிப்பாளர் பொ.ரவிச்சந்திரன் கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாக கலாநிதி.செல்வி நி.நல்லையா, திருமதி.ஜெ.தியாகலிங்கம் ஆகியோரும் கௌரவ விருந்தினராக லயன் டாக்டர் வை. தியாகராஜாவும் கலந்து கொள்வர்.

விரிவுரையாளர்களுக்கு இடையிலான மென்பந்து துடுப்பாட்டம் மற்றும் எல்லே மாணவர்களுக்கிடையிலான மென்பந்து துடுப்பாட்டம், உதைபந்தாட்டம், வலைப் பந்தாட்டம் ஆகிய போட்டிகள் நடைபெறவுள்ளன. (நி-6-33)





யாழ்- புங்குடுதீவு கண்ணகை அம்மன் கோவில் புனராவர்த்தன மஹா கும்பாபிஷேக பெருவிழா நேற்றுக் காலை பக்தி பூர்வமாக இடம்பெற்றது. (படம்:-சிவசாந்தன்)



இந்தியா - புதுடில்லியில் கடந்த 18 ஆம் திகதி நடைபெற்ற சர்வதேச சம்பியன்ஷிப் கராத்தே சுற்றுப் போட்டியில் வெண்கலம் வென்ற மாணவிக்கு கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் மாவட்ட அரசாங்க அதிபர் றூபவதி கேதீஸ்வரனிடம் ஆசியினை பெற்றதுடன், தொடர்ந்து மாகாதேவா ஆச்சிரமம் முன்றலில் கௌரவிப்பு நிகழ்வு இடம்பெற்றது.

# பௌதீக வளங்கள் பற்றாக்குறையால் உரிய தேவைகளை வழங்க முடியாதுள்ளது

## இ.போ.ச கிளிநொச்சி சாலை நிர்வாகம் தெரிவிப்பு

(கண்டாவளை)

இலங்கை போக்குவரத்து சபையின் கிளிநொச்சி சாலைக்கு போதிய பேருந்துகளின்மை, ஆளணி மற்றும் பௌதீக வளங்களின் பற்றாகுறைகளால் உரிய சேவைகளை வழங்க முடியாது இருப்பதாக சாலை நிர்வாகத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தின் சீரான போக்குவரத்து சேவைகளின்மையால் மக்கள் பெரிதும் பாதிக்கப்படுவதாக சுட்டிக்காட்டி உள்ளனர். குறிப்பாக கோணாவில், யூனியன் குளம்; அக்கராயன் அதேபோன்று இராமநாதபுரம், அழகாபுரி, திருவையாறு, கோரன்னகன் கட்டு, தட்டுவன் கொட்டி, ஆனையிறவு போன்ற பகுதிகளிலே போக்குவரத்து வசதிகளின் இன்மையால் பாடசாலை மாணவர்கள், பொது மக்கள் பெரிதும் பாதிக்கப்படுவதாக தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில் உரிய போக்குவரத்து சேவைகளை முன்னெடுப்பதற்கு தங்களிடம் 64 சாரதிகள் தேவையான நிலையில் 37 சாரதிகள் தற்போது உள்ளனர்.

இதில் விபத்து காரணமாக மூன்று சாரதிகள் பணிக்காக காத்திருக்கின்றனர். அதே போன்று 64 காப்பாளர்கள் தேவையான போது 39 காப்பாளர்கள் உள்ளனர்.

அத்துடன் ஒப்பந்த அடிப்படையில் 12 பேர் காப்பாளர்களாக நியமிக்கப்பட்டு சேவைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

பொறியியல் பகுதியில் ஐந்து பேர் மாத்திரம் கடமையாற்றி வருகின்றனர். மேலும் ஐந்து பேர் தேவையான நிலை காணப்படுகிறது. இவை தவிர தற்போது சேவையில் ஈடுபடுகின்ற பேருந்துகள் 20 வருடங்களுக்கு மேலாக பயன்படுத்தி வருகின்ற பேருந்துகளாக காணப்படுவதனால் அவை அடிக்கடி பழுதடையும் நிலைமையும் காணப்படுகிறது.

தற்போது மாவட்டத்தில் 28 பேருந்துகள் மாத்திரமே இருக்கின்றன. அதில் 26 பேருந்துகள் சேவையில் ஈடுபடுகின்றன.

இவ்வாறான நிலையில் மேலதிக சேவைகளை ஆரம்பிக்க முடியாத நிலைமை காணப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-6-315)

# இரவில் காட்டு யானைகள் அட்டகாசம் பகலில் குரங்குகளால் தொல்லை

## விவசாயிகள் கவலை

(கண்டாவளை)

கிளிநொச்சி, வன்னேரிக்குளம் மற்றும் ஜெயபுரம் ஆகிய பகுதிகளில் இரவு வேளைகளில் காட்டு யானையின் தொல்லையும் பகல் வேளைகளில் குரங்குகளின் தொல்லை காரணமாகவும் தமது விவசாய நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியாதிருப்பதாக விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் வாழும் ஏராளமான குடும்பங்கள் விவசாயத்தை வாழ்வாதாரத் தொழிலாக கொண்டு வாழ்ந்து வருகின்றனர்.

தற்போது நெற் செய்கையை விட மேட்டு நிலச் செய்கைகளும் அதிகளவில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

குறிப்பாக வன்னேரிக்குளம், ஆனை விழுந்தான், ஜெயபுரம் ஆகிய பகுதிகளில் தற்போது காட்டு யானைகளின் தொல்லையும் குரங்குகளின் தொல்லையும் அதிகரித்து காணப்படுகின்றது.

இதனால் பாரிய அளவில் அழிவுகள் ஏற்படுவதால் நட்டத்தை எதிர் கொள்வதாகவும் குறிப்பிட்டுள்ளனர்.

மேலும் சம்பந்தப்பட்ட திணைக்களங்கள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (நி-6-315)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இணைய வழி மூலம் கடவுச்சீட்டுக்கு விண்ணப்பிப்போர் தொகை அதிகரிப்பு

(கொழும்பு)

கடந்த 9 நாட்களில் கடவுச்சீட்டுக்கான இணையத் தளத்தில் சுமார் 9,000 விண்ணப்பங்கள் கிடைத்துள்ளதாக குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தின் கட்டுப்பாட்டாளர் நாயகம் ஹர்ஷ இலுக்பிட்டிய தெரிவித்துள்ளார்.

திணைக்களம் ஜூன் 15 ஆம் திகதி கடவுச்சீட்டுக்கான இணையவழி விண்ணப்பங்களை வெளியிட்டது.

விண்ணப்பதாரர் தங்கள் கைரேகையினை பதிவு செய்ய நியமிக்கப்பட்ட 51 பிரதேச செயலக அலுவலகங்களில் ஏதேனும் ஒன்றைப் பார்வையிட வேண்டும்.

இணையவழி அல்லது இலங்கை வங்கி கிளைக்குச் சென்று பணம் செலுத்தலாம்.

இணையவழி பயன்பாடுகள் மூலம் இரண்டு வகையான சேவைகள் கிடைக்கின்றன. அவசர சேவைக்கு ரூ. 15,000 மற்றும் கடவுச்சீட்டு 3 நாட்களுக்குள் கூரியர் மூலம் அனுப்பப்படும்.

சாதாரண சேவையின் மூலம், கடவுச்சீட்டு 14 நாட்களுக்குள் பதிவு செய்யப்பட்ட தபால் மூலம் அனுப்பப்படும் மற்றும் அதற்கு 5,000 ரூபாவும் அறவிடப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)

# புலனாய்வுத்துறை வீழ்ச்சியே குற்றங்கள் அதிகரிக்க காரணம்

## முன்னாள் பொலிஸ் அதிகாரி

(கொழும்பு)

பாதுகாப்பு சேவைகளின் புலனாய்வுத்துறைக் கட்டமைப்பில் வீழ்ச்சி காரணமாகவே நாட்டில் குற்றங்கள் அதிகரித்துள்ளதாக ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்கள் மற்றும் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்திற்குப் பொறுப்பாக இருந்த முன்னாள் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபரான பிரிய சாந்த ஜயகொடி தெரிவித்தார்.

நாட்டில் தற்போது நாளுக்குநாள் குற்றச் செயல்கள் அதிகரித்துள்ளன.

கொலை, கடத்தல், கப்பம், பாலியல் துஷ்பிரயோகம் போன்றவை நாளாந்தம் நடக்கும் குற்றச்செயல்களாக மாறிவிட்டன.

பொலிஸ் உள்ளிட்ட பாதுகாப்புத் தரப்பினரின் புலனாய்வுத்துறை பலமான முறையில் செயற்பட்டிருந்தால் குற்றங்களை கண்டறிந்து அவை நிகழ முன்னரே தடுத்திருக்க முடியும்.

ஆனால் குற்றங்கள் நடக்கும் வீதத்தைப் பார்க்கும் போது புலனாய்வுத்துறை கட்டமைப்பில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாகவே கருத வேண்டியுள்ளது என்றும் தெரிவித்துள்ளார். (நி)

# சந்தைகளில் நேற்றைய விலைகள்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 250 | 200 | 180 | 240 |
| உருளைக்கிழங்கு | 180 | 200 | 200 | 200 |
| பச்சைமிளகாய் | 600 | 500 | 800 | 800 |
| தக்காளி | 280 | 260 | 250 | 300 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 240 | 240 | 350 |
| கோவா | 300 | 250 | 300 | 250 |
| கரட் | 250 | 400 | 450 | 450 |
| பூசணி | 100 | 100 | 200 | 100 |
| புடோல் | 150 | 140 | 200 | 200 |
| வாழைக்காய் | 100 | 180 | 100 | 120 |
| சின்ன வெங்காயம் | 350 | 300 | 400 | 400 |
| பெரிய வெங்காயம் | 140 | 130 | 140 | 140 |
| பாகற்காய் | 500 | 450 | 500 | 800 |
| வெண்டக்காய் | 300 | 160 | 150 | 300 |
| கருணைக் கிழங்கு | 160 | 180 | 200 | 200 |
| பயற்றங்காய் | 500 | 500 | 450 | 400 |
| லீக்ஸ் | 320 | 300 | 350 | 350 |
| பீற்றூட் | 420 | 350 | -- | 400 |
| கறிமிளகாய் | 380 | 400 | 350 | 450 |
| முருங்கைக்காய் | 800 | 600 | 700 | 800 |
| போஞ்சி | 550 | 500 | 550 | 600 |
| கத்தரிதம்புள்ள | 200 | 150 | 150 | 200 |
| கீரை – 1 பிடி | 60 | 70 | 60 | 100 |
| தேசிக்காய் | 300 | 300 | 300 | 350 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 80 | 70-90 | 80-100 |
| இராசவள்ளி | 350 | 250 | 250 | 300 |
| வெங்காயப்பூ | 450 | 500 | 400 | 700 |
| முள்ளங்கி | 160 | 160 | 200 | 250 |
| பொன்னாங்காணி | 80 | 80 | 80 | 50 |
| வல்லாரை | 40 | 35 | 50 | 60 |
| ஈரப்பலா | 180 | 200 | -- | 200 |

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2849

கபிலா


ஏன் மச்சி பேஸ்புக்ல அந்த பொண்ணு அவ்வளவு திட்டிட்டு போதுநீ சைலன்ட்டா இருக்கே...



ஒன்னும் இல்லடா கமன்ட்ல அருமைனு டைப் பன்றதுக்கு பதில் எருமைனு டைப் பண்ணிட்டேன்...

ஹாலிட்

எனக்கு இதே டிசைன்ல வேற கலர் இருந்தா காட்டுங்க...



அடியேய், நாம துணி எல்லாம் எடுத்து முடிச்சு, இப்போ காய்கறி கடைல இருக்கோம்.

விசால்

யூடியூப்ல சமையல் வீடியோ பாத்து ரசம் வைக்கலாம் னு ஆரம்பிச்சா... கடுக எண்ணெய்ல தாளிக்கவும்னு சொல்லும் போது ரெண்டு விளம்பரம் போடுறான். Skip பண்றதுக்குள்ள கடுகு கருகி போயிருது.



விஜி

ஜாதி,மதம்,இனம்,மொழி இதையெல்லாம் தாண்டி வருவது காதல் மட்டுமல்ல... காய்ச்சலும் தான்...



மிருஷாலி



பெரிய மகன் பாரிசில்... நடுமகன் நோர்வேயில்... இளைய மகன் இத்தாலியில்... பெருமையுடன் பெரியவர் சொன்னார்... முதியோர் இல்லத்தில்!

கவிந்தன்

டாக்டர்- நீங்கள் ட்ரீட்மெண்டுக்காக கொடுத்த செக் திரும்பி வந்துடுச்சு. ஏன்? என்ன இது ஏமாத்து வேலை!

பேஷண்ட்- நீங்க ட்ரீட்மெண்ட் கொடுத்த நோய் கூடத்தான் திரும்பவும் வந்துடுச்சு, நான் ஏதாவது உங்களை கேடடேனா?




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org


# கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் - 1

காவியத் தொடர்

213





அவற்றில் ஒன்றின் பின்னால் ஆழ்வார்க்கடியான் நின்று இரண்டு கிளைகளுக்கு நடுவில் தலையை நீட்டிப் பார்த்துக் கொண்டிருந்தான்.

படகு ஒன்று அலையில் அலை புரண்டு மிதந்தது. அரண்மனைப் படகு மாதிரி தோன்றியது. படகுக்காரன் கரையில் நின்று கொண்டிருந்தான்.

பட்டரையும் அவருடன் வந்தவனையும் பார்த்ததும் அவன் படகைக் கரையோரமாக இழுத்து நிறுத்தினான்.

இருவரும் படகில் ஏறிக் கொண்டார்கள். படகு நீரில் போக ஆரம்பித்ததும் பட்டருடன் வந்த மனிதன் கரைப் பக்கம் திரும்பிப் பார்த்தான்.

அவன் முகம் பளிச்சென்று நன்றாய்த் தெரிந்தது.

ஆழ்வார்க்கடியானுக்கு வியப்பு ஒன்றும் உண்டாகவில்லை. அவன் எதிர்பார்த்த மனிதன் தான் அவன்.

வீரநாராயணபுரத்திலும் கொள்ளிடத்துப் படகிலும் சந்தித்த அந்த வீர வாலிபன் தான்! கம்ஸன் வேடம் பூண்டிருந்தவனும் அவனே என்பதில் சந்தேகமில்லை.

அவர்கள் படகில் ஏறி எங்கே போகிறார்கள்? அதையும் கண்டுபிடித்து விட வேண்டியதுதான்! அதாவது தன்னுடைய ஊகம் சரிதானா என்று பார்த்து விட வேண்டும். சோழ மாளிகைகள் பல வானளாவி நின்ற வீதியில் கடைசி மாளிகை ஒன்று பூட்டப்பட்டுக் கிடந்தது. அது சுந்தர சோழரின் முதன் மந்திரியான அநிருத்த பிரும்மராயரின் மாளிகை. முதன் மந்திரி அநிருத்தர் பாண்டிய நாட்டின் இராஜரீக நிர்வாகத்தைச் செப்பனிட்டு அமைப்பதற்காக மதுரை சென்றிருந்தார். அவருடைய குடும்பத்தார் தஞ்சாவூரில் இருந்தார்கள். ஆகையால் அவருடைய பழையாறை மாளிகை பூட்டப்பட்டுக் கிடந்தது.

ஆழ்வார்க்கடியான் இந்த மாளிகைக்கு வந்து சேர்ந்தான். அவனைக் கண்டதும் மாளிகைக் காவலர்கள் பயபக்தியுடன் வந்து நின்றார்கள். மாளிகையின் கதவைத் திறக்கும்படிப் பணித்தான். காவலர்கள் கதவைத் திறந்தார்கள். பிறகு அவன் கட்டளைப்படி வெளிப்பக்கம் சாத்திப் பூட்டினார்கள். மாளிகையின் மூன்று கட்டுக்களையும் கடந்து பின்புறத் தோட்டத்துக்கு வந்து சேர்ந்தான். அத்தோட்டத்திலிருந்து நெருக்கமான மரஞ் செடிகளைப் பிளந்து கொண்டு கொடி வழி ஒன்று சென்றது. திருமலை அதில் புகுந்து சென்று சிறிது நேரத்தில் குந்தவை தேவியின் மாளிகைத் தோட்டத்தை அடைந்தான். கொடி வீடு ஒன்றில் மறைவான இடத்தில் நின்று சுற்றுமுற்றும் பார்த்துக் கொண்டிருந்தான். இவ்வளவு சிரமம் அவன் எடுத்துக் கொண்டது வீண்போகவில்லை.

காளிதாஸன் முதலிய மகாகவிகள் வர்ணிக்க வேண்டிய நாடக நிகழ்ச்சி ஒன்று அங்கே நடந்தது.

நீரோடைக் கரையில் படகு வந்து நின்றது. அதிலிருந்து ஈசான பட்டரும் வந்தியத்தேவனும் இறங்கினார்கள். பிறகு நீர்த்துறையின் படிக்கட்டுகளின் வழியாக ஏறி வந்தார்கள்.

படிக்கட்டுகளுக்குச் சற்றுத் தூரத்தில் தோட்டத்தில் அமைந்திருந்த பளிங்குக்கல் மேடையில் இளைய பிராட்டி குந்தவை அமர்ந்திருந்தாள்.

படகில் வந்தவர்கள் நீர்த்துறையில் படிக்கட்டுகளில் ஏறி மேற்படிக்கு வந்ததும் இளையபிராட்டி குந்தவை தேவி எழுந்து நின்றாள். வந்தியத்தேவன் அப்போது தான் அப்பெண்ணரசி யின் திருமுகத்தைக் கூர்ந்து பார்த்தான்.

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## கிளி கொடுத்த பழம்



குஞ்சுலபாதம் என்ற நாட்டை வசீகரன் என்ற மன்னன் ஆண்டு வந்தான். அவர்களுக்கு குழந்தை கிடையாது. அதனால் அவர்கள் ஒரு பச்சைச்சைக் கிளியை வளர்த்து வந்தனர்.

அக் கிளி மிகவும் அழகானது. ஒரு நாள் ஒரு முனிதவம் செய்யும் போது அவர் அருகில் வந்து உட்கார்ந்திருந்தது.

"ஏய்கிளியே - நீ மிகவும் அழகாய் இருக்கிறாய், உனக்கு நான் ஒரு பழம் தருகிறேன். அதை சாப்பிட்டால் என்றும் இளமையுடன் இருப்பாய்," என்று கூறி பழத்தை கொடுத்தார்.

கிளி அப் பழத்தை வாங்கி வந்து தான் சாப்பிடாமல் அரசனிடம் கொடுத்தது. அரசன் அப் பழத்தை சாப்பிடாமல் தன் தோட்டத்தில் நட்டு வைத்தால் அம் மரம் பெரிதானவுடன் அதில் வரும் பழத்தை நம் மக்கள் சாப்பிடலாம் என்றெண்ணி அப் பழத்தை நட்டு வைத்தான் அரசன்.

அம் மரத்திற்கு காவலாளி ஒருவன் இருந்தான். ஒரு நாள் அம் மரம் பெரிதாகி பழம் பழுத்தது. "ஒரு நாள் இந்த பழத்தை பறித்து தன் அரசனுக்கு மறு நாள் கொடுக்கலாம்," என்று நினைத்தான்.

அன்று மாலை ஒரு நல்ல பாம்பு அம்மரத்தில் ஏறி ஒரு பழத்தில் தன் விஷத்தை கக்கியது. அது காவலாளிக்கு தெரியாது. மறுநாள் அந்த காவலன் தன் அரசனுக்கு பழத்தை பறித்துக் கொடுத்தான்.

அப் பழம் பாம்பு விஷத்தை கக்கிய பழம் என்று தெரியாமல் கொடுத்தான். அரசன் அப்பழத்தை வாங்கிக் கொண்டு, "நீ ஒரு வருடமாக கஷ்டப்பட்டு வளர்த்தவன். அதனால் இந்தப் பழத்தை நீ சாப்பிடு!" என்று கூறினான்.

காவலன் பழத்தைச் சாப்பிட்ட உடனே இறந்து விட்டான். அதைக் கண்ட அரசன் அதிர்ச்சியடைந்தான்.

இதற்கு காரணமான கிளியை அடித்துக் கொன்றான். அந்த மரத்தின் பழத்தை யாரும் சாப்பிடக்கூடாது என கட்டளையிட்டான்.

ஒரு நாள் வயதான நோயினால் தள்ளாடிய கிழவன் ஒருவன், தன் பிள்ளைகள் தன்னை பார்க்கவில்லையே என்ற வேதனையில் நாம் இருந்து என்ன பயன் என்று நினைத்தான்.

எனவே, இந்த விஷப் பழத்தை சாப்பிட்டு செத்துடலாம் என நினைத்து அந்த மரத்தில் ஏறிஅங்கிருந்த பழத்தை பறித்து சாப்பிட்டான். அவ்வளோ தான் அவனது வயோதிபத் தோற்றம் மாறி அழகிய இளைஞனான்.

இந்தச் செய்தி அரசனின் காதுக்கு சென்றது. ஆச்சர்யமடைந்த அரசன் அப்பழத்தை தின்றான். அவனும் நோய் நீங்கி இளைஞனான். அவசரப்பட்டு கிளியை கொன்றதை எண்ணி வருந்தினான்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூகத்தை உயர்த்த வேண்டும் என்ற விழுமிய நோக்கத்தில் உந்தப்படுபவரே உயர்ந்த மனிதர். –டாக்டர் அம்பேத்கர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## தீவக மக்களுக்கு திட்டமிட்டு இழைக்கப்பட்ட அநீதி இதுவன்றோ

மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்த போது, நாடு பூராகவும் ஹாப்பெற் வீதிகள் அமைக்கப்பட்டன.

அதிலும் குறிப்பாக வட மாகாணத்தில் அநேகமான வீதிகள் ஹாப்பெற் வீதிகளாக அமைக்கப்பட்டன.

தவிர, சில ஊர்களின் உள் வீதிகள் கூட ஹாப்பெற் வீதிகளாக புனரமைக்கப்பட்டன.

எனினும் வேலணை – புங்குடுதீவு தாம்போதியும் புங்குடுதீவு – குறிகாட்டுவான் பிரதான வீதியும் இதுவரை புனரமைக்கப்படாமல் இருப்பதுதான் ஆச்சரியமும் அதிசயமுமாக இருக்கிறது.

வடக்கின் வசந்தம் திட்டத்தின் மூலம் குச்சொழுங்கைகள் கூட, தார் றோட்டாக மாற்றப்பட்டன.

ஆனால் வேலணை அராலிச் சந்தியில் இருந்து புங்குடுதீவு குறிகாட்டுவானுக்குச் செல்லும் பிரதான வீதியும் புங்குடுதீவு தாம்போதியும் புனரமைக்கப்படாமல் தவிர்க்கப்பட்டமை ஏன்? என்பதுதான் புரியாத புதிராக உள்ளது.

சுருங்கக்கூறின் யாராவது அரசியல் செல்வாக்கு மிக்கவர்கள் தலையிட்டு அந்த வீதியின் புனரமைப்பதை தடுத்தாலன்றி மற்றும்படி வேலணை – புங்குடுதீவு – குறிகாட்டுவான் வீதி கட்டாயம் திருத்தப்பட்டிருக்க வேண்டும்.

ஏனெனில் நயினாதீவுக்குச் செல்கின்றவர்களில் பெரும்பாலானவர்கள் சிங்கள மக்களாக உள்ளனர்.

நிலைமை இவ்வாறாக இருந்தும் அந்த வீதி புனரமைக்கப்படாமையால் மக்கள் மிகப் பெரும் அசௌகரியங்களை எதிர்கொண்டுள்ளனர்.

அதிலும் நேற்றைய தினம் (25) புங்குடுதீவு கண்ணகை அம்மன் ஆலயத்தின் மகா கும்பாபிஷேம் இடம்பெற்றது.

கும்பாபிஷேகத்தில் கலந்து கொள்வதற்காகப் பல்லாயிரக்கணக்கான அடியார்கள் புங்குடுதீவுக்குப் படையெடுத்தனர்.

அதிலும் வெளிநாடுகளில் இருந்து பலர் ஆலய கும்பாபிஷேகத்தில் பங்கேற்று கண்ணகைத் தாயை வழிபடுவதற்காக வந்திருந்தனர்.

இவ்வாறு வந்தவர்களின் வாகனங்கள், குன்றும் குழியுமாக இருக்கக்கூடிய புங்குடுதீவு வீதியில் – தாம்போதியில் விழுந்து எழுந்து சரிந்து நெழிந்து பயணிக்க வேண்டியதாயிற்று.

இதைப் பார்த்தபோது; எங்கள் மண்ணில் தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் இருக்கிறார்களா? இவர்களுக்கு தீவகத்தின் நிலைமை தெரியுமா?

இவர்களின் அரசியல் வியாபாரம் எல்லாம் அரசாங்கத்தை எதிர்ப்பதாகக் காட்டிக் கொள்வது மட்டும்தானா?

இவர்கள் தொடர்ச்சியாகத் தீவகத்தைப் புறந்தள்ளுவதை நிரூபிப்பதற்கு இதைவிட்ட சான்றாதாரம் வேறு தேவையில்லை என்ற நியாயமான வினாக்கள் மக்களிடம் எழுந்தன.

ஆக, மேற்படி வேலணை – புங்குடுதீவு பிரதான வீதி உடனடியாக ஹாப்பெற் வீதியாகப் புனரமைக்கப்பட வேண்டும்.

இது விடயத்தில் சம்பந்தப்பட்டவர்கள் உடன் நடவடிக்கை எடுப்பது கட்டாயமானது.

# தமிழ் மக்களை ஏமாற்றி தமிழ்த் தலைவர்கள் அரசியல் பிழைப்பு நடத்துகின்றார்கள்

## அமைச்சர் பிரசன்ன ரணதுங்க

தமிழ் அரசியல் தலைவர்கள் தமிழ் மக்களை ஏமாற்றி அரசியல் பிழைப்பு நடத்துகின்றார்கள் என ஆளும் கட்சியின் பிரதம கொறடாவும் அமைச்சருமான பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

அண்மையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தமிழ் மக்கள் தொடர்பில் வெளியிட்ட கருத்து தொடர்பில் தமிழ் அரசியல் தலைவர்கள் பல்வேறு குற்றச்சாட்டினை முன்வைத்திருந்தனர். இந் நிலையில் அவர்களின் கருத்துக்கு பதிலளிக்கும் விதமாக ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்திருந்தார்.

இது தொடர்பில் மேலும் கருத்து தெரிவிக்கையில் அரசியல் கைதிகள் விடுதலை,காணாமல்போனோர் விவகாரம், அதிகாரப் பகிர்வுடனான அரசியல் தீர்வு, காணிப் பிரச்சினைகளுக்கான தீர்வு ஆகியன தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க லண்டனில் கூறிய கருத்து உண்மையானது.

தமிழ் எம்.பிக்களுடன் நடத்திய பேச்சுக்களின் அடிப்படையில்தான் அந்தத் தகவல்களை லண்டனில் ஜனாதிபதி கூறினார்.

ஆனால், தமிழ் அரசியல் கட்சிகளின் தலைவர்கள் சிலர் தங்கள் அரசியல் இலாபங்களுக்காக இதனை மறுக்கின்றார்கள். அவர்கள் தமிழ் மக்களை ஏமாற்றி அரசியல் பிழைப்பு நடத்துகின்றார்கள். இது தமிழ் மக்களுக்கும் தெரியும் என பிரசன்ன ரணதுங்க தெரிவித்திருந்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க லண்டன் விஜயத்தில் கனடாவின் முன்னாள் பிரதமரும் சர்வதேச ஜனநாயக ஒன்றியத்தின் தலைவருமான ஸ்ரீபன் ஹாப்பரை சந்தித்த போது தமிழ் மக்களின் விவகாரம் குறித்து கேள்வி எழுப்பி இருந்தார்.

இதற்கு பதிலளிக்கும் முகமாக தமிழ் மக்கள் தொடர்பில் ரணில் தெரிவித்த கருத்துக்கள் தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், த.சித்தார்த்தன், சி.சிறீதரன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் ஈ.பி.ஆர்.எல்.எவ். தலைவர் க.சுரேஷ் பிரேமச்சந்திரன் ஆகியோர் தமது கடும் விசனத்தை வெளியிட்டிருந்தனர்.

மேலும், ஜனாதிபதியின் கருத்து முற்றிலும் பொய் என அவர்கள் குறிப்பிட்டிருந்தனர். (ம-7)

## போதைப்பொருளின் தாக்கத்தை முறியடிக்க ஒன்றிணைந்திடுவீர்

### போதைப்பொருள் தகவல் மையம் அழைப்பு

(கொழும்பு)

இன்றைய தினம் உலக போதைப்பொருள் எதிர்ப்பு தினம் ஆக பிரகடனப்பட்டுள்ள நிலையில் சிகரெட் மற்றும் மதுபான பாவனையால் நாட்டில் தினமும் 100 பேர் அகால மரணம் அடைவதாக மது மற்றும் போதைப்பொருள் தகவல் மையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான நிலையில் தற்போது சர்வதேச புகையிலை நிறுவனங்கள் கஞ்சாவை வியாபாரமாக செயற்படுத்துவதற்கு மூலோபாயமாக பணத்தை முதலீடு செய்து வருவதாகவும் கூறப்படுகிறது.

அத்துடன் கஞ்சா பாவனையை முதலீட்டுத் திட்டமாக இலங்கையில் நடைமுறைப்படுத்த அரசாங்கம் மேற்கொண்ட முயற்சிகள் பலனளிக்கவில்லை என போதைப்பொருள் தகவல் மையம் குறிப்பிட்டுள்ளது.

எனவே சிறுவர்கள், இளைஞர்கள் மற்றும் முதியோர்களை போதைப் பொருள் பாவனையில் இருந்து காப்பாற்ற அனைவரினதும் பங்களிப்பு அவசியம் எனவும் மது மற்றும் போதைப்பொருள் தகவல் மையம் வலியுறுத்தியுள்ளது. (ம-7)

## துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் உயிரிழப்பு

(கொழும்பு)

அம்பலாங்கொடை நகரில் நேற்று முன்தினம் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

முச்சக்கர வண்டியில் பயணித்த குறித்த நபர் மீது மோட்டார் சைக்கிளில் வந்த இருவரால் துப்பாக்கிப் பிரயோகம் நடத்தப்பட்டுள்ளதாகவும் துப்பாக்கிப் பிரயோகம் நடத்திய சந்தேகநபர்கள் தப்பிச் சென்றுள்ளதாகவும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

அம்பலாங்கொடை - ரன்தொம்பே பகுதியை சேர்ந்த 56 வயதான ஒருவரே துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்தவராவார்.

சம்பவம் தொடர்பில் அம்பலாங்கொடை பொலிஸார் மேலதிக விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (ம-7)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரை **யாழ். பிரதேசத்தில்** கே.எம்.கே கடல் உணவு (பிரைவேட்) லிமிட்டெட், மூளாய், மண்கும்பான் நீர்ப்பாசன சபை, மண்டைதீவு கடற்படை முகாம்,அல்லைப்பிட்டி, அல்லைப்பிட்டி தேவாலயத்தடி, மண்டைதீவு, மண்கும்பான், ம்ண்கும்பான் விடுதியடி, பூம்புகார், வெண்புரவிநகர் ஆகிய இடங்களிலும் **வவுனியா பிரதேசத்தில்** அழகல்ல [illegible] ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

## இந்தியாவின் பங்களிப்புடன் மலையகத்தில் வீட்டுத்திட்டம்

மலையக வீடமைப்பு திட்டம் உட்கட்டமைப்பு அபிவிருத்தி மற்றும் சுகாதார அபிவிருத்தி ஆகியன தொடர்பாகவிசேடகலந்துரையாடலொன்று இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும், நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தலைமையில் பாராளுமன்ற உறுப்பினர் மருதபாண்டி ராமேஸ்வரனின் பங்குபற்றலோடு நடைபெற்றது.

கொழும்பு, கொள்ளுப்பிட்டியவில் உள்ள அமைச்சில் இடம்பெற்ற இச்சந்திப்பில் அமைச்சின் மேலதிக செயலாளர் தீப்தி, திட்டமிடல் பிரிவின் பணிப் பாளர் வஹாப்தீன் பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியத்தின் தலைவர் பாரத் அருள்சாமி, பணிப்பாளர் லால் பெரேரா; அமைச்சின் அதிகாரிகள் உட்பட பலர் பங்குபற்றியிருந்தனர்.

அமைச்சினால் முன்னெடுக்கப்படும் வீடமைப்பு திட்டம் மற்றும் பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியத்தின் மேற்பார்வையில் மேற்கொள்ளப்படும் வீடமைப்பு திட்டங்கள் சம்பந்தமாக இதன் போது விரிவாக கலந்துரையாடப்பட்டன. அத்துடன், இந்தியாவின் நிதி பங்களிப்புடன் முன்னெடுக்கப்பட்டு வரும் வீடமைப்பு திட்டம் சம்பந்தமாகவும் கருத்தாடல் இடம் பெற்றது.

வீடமைப்பு திட்டம் துரிதப்படுத்தப்பட வேண்டிய தன் அவசியத்தை அதிகாரிகளுக்கு எடுத்துரைத்த அமைச்சர், வீட்டுத்திட்டம் பணிகள் விரைவாக நிறைவுபெற முழு ஒத்துழைப்பையும் நல்குமாறு கேட்டுக்கொண்டார். (ம-7)

## நூற்றாண்டு விழாவும் பரிசளிப்பு நிகழ்வும்

(யாழ்ப்பாணம்)

அமரர். ஆங்கில ஆசிரியர் அ.க.ந.விஜயரத்தினத்தின் நூற்றாண்டு விழாவும் பரிசளிப்பு நிகழ்வும் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யா/காரைநகர் இந்துக் கல்லூரி நடராஜா மண்டபத்தில் பாடசாலை அதிபர் அ.ஜெகதீஸ்வரன் தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக சுன்னாகம் யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி அதிபர் மு.செல்வஸ்தான், சிறப்பு விருந்தினர்களாக காரைநகர் யா/யாழ்ற்ரன் கல்லூரி ஓய்வு நிலை அதிபர் ந.பரமசிவம், சுன்னாகம் யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி ஓய்வுநிலை பிரதி அதிபர் சி. மகேந்திரன், சுன்னாகம் யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி ஓய்வு நிலை பிரதி அதிபர்இ.ஜோர்ஜ் சுழிபுரம் யா/விக்ரோறியாக் கல்லூரி அதிபர் திருமதி.சத்தியகுமாரி சிவகுமார் மற்றும் காரைநகர் யா/யாழ்ற்ரன் கல்லூரி அதிபர் திருமதி. அஜந்தினி யதீஸ்குமார் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை நாணயத்தின் வரலாறும் அரசியலும் விஜயன் வருகையிலிருந்து

## பொலநறுவை யுகம் முடியும் வரை- பகுதி I

01

கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.



இன்று, மில்லியன் கணக்கான மக்கள் பொதுவாக நாணயத்தை உத்தியோகபூர்வத் தகவல் தொடர்பு மற் றும் பரப்புதலுக்கான ஒருமுறையாகப் பயன்படுத்துகின்றனர்.மேலும் அது சக்தி வாய்ந்த மற்றும் நம்பகமான உதவிப் பொருளாக மாறியுள்ளது. பரிவர்த்தனைக்கான வழிமுறையாக வெளியிடப்பட்ட நாணயங்கள் பல்வேறு கலை வெளிப்பாடுகளை உள்ளடக்கியது. மற்றும் அதிகாரத்தின் சின்னமாகவும் பயன்படுத்தப்படுகின்றன. எந்த வொரு நா்டும் வெளியிடும் நாணயங்கள் எப்போதும் அதன்சமூகத்தின் பல்வேறு அம்சங்களைக் குறிக்கின்றன.

ஒரு நாணயத்தில் பொறிக்கப்பட்ட படங்கள், சின்னங்கள் மற்றும் புனைவுகள் அரசியல், மத, கலாசார மற்றும் பொருளாதார நிலைகளைப் பிரதி பலிக்கின்றன ஏன்பது ஒப்புக் கொள் ளப்படுகிறது. அவற்றில் ஒரு குறிப்பிட்ட நிகழ்வை நினைவுகூரும் வகையில் வெளியிடப்பட்ட நாணயங்களும் அடங்கும். இந்த நாணயங்கள் நினைவு நாணயங்களாக அடையாளம் காணப்படுகின்றன.

1957 முதல் 2021 வரை, இலங்கை மத்தியவங்கி 43 சிறப்பு நிகழ்வுகளுக்காக, பல்வேறு மதிப்புகளில் 68 நினைவு நாணயங்களை வெளியிட்டுள்ளது. சிறப்பு நிகழ்வுகள் தொடர்பான நினைவு நாணயங்களை வெளியிடும் போது, அந்தநிகழ்வு தொடர்பான படங்கள் நாணயத்தில் சித்தரிக்கப்படுகின்றன. நினைவு நாணயங்களை வெளியிடுவதில் கூட, அரசியல் தகவல்களை பொதுமக்களுக்கு தெரிவிப்பதே முதன்மை நோக்கமாக இருந்தது. இது உலகிற்கு பெருமையுடன் தெரிவிக்கக் கூடிய இலங்கையின் அடையாளத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் முறையாகவும் கருதப்படுகின்றது.

தன்னிறைவுப் பொருளாதார முறைக்குள் வாழ்ந்த ஆரம்பகால மனிதர்கள், உற்பத்தியில் உபரிப் பொருட்களைக் கொண்டு 'பண்ட மாற்று' பொருளாதார முறைக்கு மாறினார்கள். பண்டமாற்று முறையுடன் தொடங்கிய பரிவர்த்தனைகள் வேகமாக வளர்ச்சியடைந்ததால், அதன் நீண்டகால விளைவு "நாணயம்" என அடையாளம் காணப்பட்ட மதிப்பின் அலகாக அறிமுகப்படுத்தப்பட்டது.

நாணயம் என்பதை ஒவ்வொரு சமூகமும் தமக்கு வழங்கப்பட்ட பொருட்களின் அல்லது சேவைகளின் உத்தியோகபூர்வ தகவல் தொடர்புக்காக பயன்படுத்தப்படும் பரிமாற்ற அலகு என்று கூறலாம். இன்று, மில்லி யன்கணக்கான மக்கள் பொதுவாக் நாணயத்தை உத்தியோகபூர்வதகவல் தொடர்பு மற்றும் பரப்புதலுக்கான ஒருமுறையாகப் பயன்படுத்துவதால் அது ஒரு சக்தி வாய்ந்த மற்றும் நம்பகமான சாதனமாக மாறிவிட்டது.

உலகில் புழக்கத்தில் உள்ள நாண யம் இரண்டு வகையானது, அதாவது, நாணயக் குத்திகள் மற்றும் நாணயத்தாள்கள். ஆக்ஸ்பேர்டு அகராதியின்படி, நாணயக்குத்தி என்பது ஏற்றுக் கொள்ளக்கூடிய உலோகத்தால் செய்யப்பட்டதகடு ஆகும். அது ஒரு. குறிப்பிட்ட அதிகாரத்தால் குறிக்கப்படும் எடை மற்றும் ஒரு குறிப்பிட்ட பெறுமதியில் உள்ள தொன்றாகும். கேம்பிரிட்ஜ் அகராதி ஒரு நாணயத்தை ஒரு சிறிய, வட்ட வடிவமான உலோகம், வெள்ளி அல்லது செப்பு நிறத்தில் பணமாகப் பயன்படுத் துவதாக வரையறுக்கிறது. காலின்ஸ் அகராதி, ஒரு தனித்துவமான முத்திரையுடன் பொதுவாக வட்டவடிவமான உலோகத்துண்டெனக் கூறுகிறது. மேலும் ஒரு அரசாங்கத்தால் வழங்கப்படும் நிலையான மதிப்பு மற்றும் எடை ஒரு நாணயமாகக் கருதப்படுகிறது.

பொதுவாக நாணயம் என்பது பொருட்களையும் சேவைகளையும் பரிமாறிக் கொள்வதற்கான ஒரு "பரிமாற்ற அலகு" ஆகும். அவ்வாறு பணம்என்பதும் ஒரு பரிமாற்ற ஊடகமும் பெறுமானத்தைத் தன்னுள் அடக்கி யுள்ள ஒன்று என்பதால் நாணயமும் பணத்தின் ஒரு வடிவம் என்று சொல்லலாம்.

பெரும்பாலும் ஒவ்வொரு நாடும் தனது நாணயத்தின் உற்பத்தியிலும் வழங்கலிலும் தனியுரிமை கொண்டுள்ளன. இவ்வாறு வெவ்வேறு நாணயங்களைக் கொண்ட நாடுகளிடையே வணிகத்துக்கு உதவுவதற்காக நாணய மாற்று விகிதங்கள் உள்ளன. தமது நாணயங்கள் மீது கட்டுப்பாடுகளைக் கொண்டுள்ள நாடுகள் அதனை மத் திய வங்கிகள் மூலமாகவோ அல்லது நிதி அமைச்சகங்கள் மூலமாகவோ செயற்படுத்துகின்றன.

நாணயவியல் என்பது, எல்லா வகைகளிலுமான நாணயம், அதன் வரலாறு முதலியன தொடர்பான அறி வியல் சார்ந்த துறையாகும். இது பெரு ம்பாலும், நா்ணயம் பற்றியஆய்வு, நாணயச் சேகரிப்புப் போன்றவை தொட ர்பிலேயே பரவலாக அறியப்பட்டிருந் தாலும், பணக்கொடுக்கல்வாங்கல்ஊடகங்கள் சம்பந்தமான விரிவான ஆய்வுகளையும் இத்துறை உள்ளடக்குகிறது.

### உலகின் பழமையான நாணயம், பண்டைய லிடியா இராச்சியத்தில் உருவாக்கப்பட்டது



நாணயம் அல்லது பணம் எப்போது கண்டுபிடிக்கப்பட்டது? பணத்தைக் கண்டுபிடித்தவர் யார்? என்பது யாருக்கும் உறுதியாகத் தெரியவில்லை. பணத்தின் வரலாறு ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முந்தையது. பண்டமாற்று முறையின் ஆரம்ப நாட்களில் இருந்து முதல் உலோக நாணயங்கள் மற்றும் இறுதியில் முதல் காகித பணம் வரை, ஒரு சமூகமாக நாம் செயற்படும் விதத்தில் இது எப்போதும் ஒரு முக்கிய தாக்கத்தை ஏற்படுத்துகிறது என்பது மட்டும் எமக்குத் தெரியும்.

ஆரம்ப காலங்களில் பொருட்களை வாங்குவதற்கு நாணயங்கள் பயன்ப டுத்தப்படவில்லை. பண்டமாற்று முறையே பின்பற்றப்பட்டு வந்தது என முன்னர் கூறப்பட்டது. கி.மு.9000 இலிருந்துகி.மு.6000 வரை கால்நடை களே பண்டமாற்று சாதனங்களாகப் பெரிதும் பயன்பட்டன. பின்னர்விவசாய ப்பொருட்கள் பண்டமாற்றுக்குப் பயன்பட் டன. கி.மு.1200 வாக்கில் சீனாவில் கவ்ரி வகையைச் சேர்ந்த நத்தை ஓடுகள் பண்டமாற்றுக்குஉதவின என்று கருதப்படுகிறது.

கடற்கரையில் கிடைக்கும் க்ளாம் வகைச் சிப்பிகளை நாணயங்கள் போல வடஅமெரிக்காவில் பயன்படுத்தினர் என்று கூறப்படுகிறது. கி.மு. 1000 இல் சீனா செயற்கை ஓடுகளை நாணயங்களைப் போல பயன்படுத்தியது.

இச்செயற்கை ஓடுகள் உலோக நாணயத்தின் மூல வடிவம் என்று கூறலாம். பழங்கால சீனாவில் வட்ட வடிவமான நாணயங்களில் செவ்வக வடிவில் துவாரங்கள் அமைக்கப்பட்டிருந்தன. இத்துவாரங்கள் நாணயங்களை ஒரு சங்கிலி மூலம் கோர்ப்பதற்கு பயன்பட்டன.

கி.மு.500களிலேயே வெள்ளித் துண்டு நாணயங்கள் தோன்றின என்ற கருத்தும் உண்டு. லிடியா, துருக்கி போன்ற இடங்களில் ஆரம்பத்தில் தோன்றிய வெள்ளித் துண்டு நாணயங்கள் பின்னர் கிரேக்க, பெர்ஷிய, ரோமானிய அரசர்களால் மேம்படுத்தப்பட்டன. கி.பி. 118 இல் பொருட்களை வாங்க ஒரு சதுர அடி பரப்பளவு கொண்ட மானின் தோல் பயன்பட்டது. இதுவே நாணயத்தாளின் முதல் முயற்சி எனலாம்.

நாணயங்களின் பயன்பாடு சம்பந்தமாக வேறுபட்ட பல கருத்துக்களும் உள்ளன. அதாவது கிமு. 5000 ஆம் ஆண்டிலேயே, நவீன கால ஈராக்கில் இருந்த சுமேரியர்கள், ஒருநிலையான அளவீடு மற்றும் நாணயமாகப் பயன்படுத்த வெள்ளித் துண்டுகளை உற்பத்தி செய்தனர் என்றும் கிமு. 4000 இல் எகிப்தியர்கள் தங்கத்தை நாணயத்தின் வடிவமாகப் பயன்படுத்தத் தொடங்கினர் என்றும் முதல் உலோக நாணயம் கி.மு.1000 இல் சீனாவில் பயன்படுத்தப்பட்டது என்றும் இந்த நாணயங்கள் வெண்கலம் மற்றும் செப்பு போன்ற மதிப்பு மிக்க உலோகத்தின் முத்திரையிடப்பட்ட (சின்னம் பொறிக்கப்பட்ட) துண்டுகளால் செய்யப்பட்டன என்றும் பல கருத்துக்கள் உள்ளன.

தமிழகத்தைப் பொருத்த வரையில் கிமு.3 ஆம் நூற்றாண்டு முதல் கிபி 2 ஆம் நூற்றாண்டு வரை உள்ள காலத்தைச் சங்க காலம் என்று தமிழக அறிஞர்கள் கூறுவார்கள். சங்ககாலத்தில் தமிழகத்தைச் சேர, சோழ, பாண்டிய மலையமான், அரசர்கள் ஆண்டு வந்தனர்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## போதைக்கு...

தொடர்பில் தெரியவருவதாவது,

மேற்படி 23 வயது இளைஞன் உயிரிழந்த பெண்ணின் உறவினராவார்.

போதைக்கு அடிமையான குறித்த இளைஞன் இறந்த பெண்ணின் வீட்டிற்கு தினமும் சென்று வருவது வழமை.

இளைஞன் போதைப் பாவனைக்கு அடிமையானவர் என்பதால் வீட்டிற்கு வரவேண்டாம் என உயிரிழந்த பெண்ணின் கணவர் எச்சரித்துள்ளார்.

இதனால் உயிரிழந்த பெண்ணுடன் இளைஞன் தொலைபேசியூடாக தொடர்புகளை பேணி குறித்த பெண்ணை எச்சரித்ததுடன், பெண்ணின் நகைகளை வாங்கி அடகு வைத்ததாக விசா ரணையில் தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில் கடந்த 19ஆம் திகதி நண்பகல் 12.15 மணியளவில் பெண் தனிமையில் இருந்த வேளை அவ் இளைஞன் உயிரிழந்த பெண்ணின் வீட்டிற்குச் சென்றுள்ளான்.

இதனை அயலில் உள்ளவர்கள் அவதானித்துள்ளனர். சுமார் 30 நிமிடங்கள் கழித்து பெண் அலறும் சத்தம் கேட்டுள்ளது.

பெண்ணின் அலறல் சத்தம் கேட்டு அயலவர்கள் ஓடிச் சென்றுள்ளனர்.

அவ் வேளை அவ் இளைஞன் வீட்டை விட்டு வெளியே ஓடிச் சென்றுள்ளதையும் அயலவர்கள் அவதானித்துள்ளனர். வீட்டிற்குள் சென்று பார்வையிட்டபோது குறித்த பெண் தீயில் எரிந்து கொண்டு உள்ளதை அவதானித்து தீயை அணைத்து பெண்ணை தெல்லிப்பளை வைத்திய சாலையில் அனுமதித்தனர்.

சற்று நேரத்தில் அவ் இளைஞனும் கை இரண்டிலும் எரிகாயங்களுடன் தெல்லிப்பளை வைத்தியசாலைக்கு சிகிச்சை பெறச் சென்றுள்ளார்.

தீயில் எரியுண்ட பெண் மேலதிக சிகிச்சைக்கீக உடனடியாக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். ஆனாலும் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் சனிக்கிழமை மாலை 3.00 மணியளவில் அவர் உயிரிழந்துள்ளார்.

இம் மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் விசாரணைகளை மேற்கொண்டு பிரேத பரிசோதனைக்கு உத்தரவிட்டார்.

மேலதிக விசாரணைகளை மேற்கொண்ட தெல்லிப்பளை பொலிஸார் இளைஞனை கைது செய்து மல்லாகம் நீதிமன்றில் முற்படுத்தியுள்ளனர். பெண்ணை எரித்துக் கொலைசெய்த சந்தேகத்தின் அடிப்படையில் இளைஞன் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். (ம-7,33,60)

## முல்லையில்...

இளைஞனே உயிரிழந்தவராவார்.

நேற்றுப் பிற்பகல் இந்த விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

குறித்த விபத்தில் மல்லாகம் திருநகர் பதியைச் சேர்ந்த மேலும் ஒருவர் படுகாயமடைந்துள்ளதாகவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

முல்லைத்தீவு - மல்லாவி பிரதான வீதியில் மோட்டார் சைக்கிளுடன் சிறிய ரக வாகனம் ஒன்று மோதியே இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

இதன்போது இரண்டு வாகனங்களும் தீப்பற்றி எரிந்துள்ளதோடு அதில் மோட்டார் சைக்கிள் முற்றிலும் சேதமடைந்துள்ளது.

குறித்த சம்பவம் விபத்தா? அல்லது திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட கொலைச் சம்பவமா? என பொலிஸார் பல்வேறு கோணங்களில் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ம-7,315)

## கடன் மறுசீரமை...

கள் சந்திப்பில் கலந்து கொண்டு அவர் இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்,

29ஆம் திகதியன்று ஹஜ் பெருநாள் காரண மாக மூடப்படும் வங்கிகள், 30ஆம் திகதியும் பின்னர் ஜூலை முதலாம், இரண்டாம் திகதிகளின், சனி மற்றும் ஞாயிறு ஆகிய தினங்களிலும் பின்னர் பூரணை தினமான ஜூலை 3ஆம் திகதி திங்கட்கிழமையும் மூடப்படவுள்ளன.

இந்த விடுமுறைகளில் உள்நாட்டு கடன் மறுசீரமைப்பை செயற்படுத்துவதற்கு தயாராகவுள்ளதாக நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

இந்தநிலையில் உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு தேசிய வங்கி கட்டமைப்புக்கு பாதிப்பை ஏற்படுத்தாது எனவும் மத்திய வங்கி ஆளுநர் நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார். (ம-7)

## அரச காணிகள்...

வரும் 15 நாட்களில் அதற்கான புதிய திட்டமொன்று அறிமுகப்படுத்தப்பட

வுள்ளதாக காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் தலைவர் நிலந்த விஜேசிங்க தெரிவித்துள்ளார்.

நில அளவைப் பணிகளை நிறைவு செய்த தமது ஆணைக்குழுவின் கீழ் வரும் 57 ஆயிரம் காணிகளுக்கு காணி உறுதிகள் வழங்கப்படவுள்ளதாகவும் நிலந்த விஜேசிங்க தெரிவித்துள்ளார். (ம-7)

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் மூவர் பேராசிரியர்களாக பதவி உயர்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் சிரேஷ்ட விரிவுரையாளர்கள் மூவர் பேராசிரியர்களாகப் பதவி உயர்த்தப்பட்டுள்ளனர்.

பொறியியல், விவசாயம் மற்றும் இந்து கற்கைகள் ஆகிய பீடங்களைச் சேர்ந்த மூன்று சிரேஷ்ட விரிவுரையாளர்களைப் பேராசிரியர்களாகப் பதவி உயர்த்துவதற்குப் பல்கலைக் கழகப் பேரவை நேற்று ஒப்புதல் வழங்கியுள்ளது.

பல்கலைக்கழகப் பேரவையின் மாதாந்தக் கூட்டம் நேற்று ஞாயிற் றுக் கிழமை காலை, துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா தலைமையில் இடம்பெற்றது. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுச் சுற்றறிக்கை நியமங்களுக்கு அமைய திறமை அடிப்படையில் பேராசிரியர் பதவிக்கு விண்ணப்பித்தவர்களின் மதிப்பீடு, நேர்முகத்தேர்வு முடிவுகள் நேற்றைய பேரவைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

அவற்றின்படி, பொறியியல் பீடத்தின் மின்னியல் மற்றும் மின்னணுவியல் பொறியியல் துறைத் தலைவரும், சிரேஷ்ட விரிவுரையாளருமான கலாநிதி எம். கே. அகிலன் மின்னியல் மற்றும் மின்னணுவியல் பொறியியல் துறையில் பேராசிரியராகவும், விவசாய பீடத்தின் விவசாய உயிரியல் துறைத் தலைவரும், சிரேஷ்ட விரிவுரையாளருமான கலாநிதி க. பகீரதன் விவசாய உயிரியல் துறையில் பேராசிரியராகவும், இந்து கற்கைகள் பீடத்தின் இந்து நாகரிகத் துறையைச் சேர்ந்த சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி (திருமதி) விக்னேஸ்வரி பவநேசன், இந்து நாகரிகத் துறையில் பேராசிரியராகவும் பதவி உயர்த்தப்பட்டுள்ளனர். (ம-7)

## ஜனா...

டுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாடு திரும்பும்போது கட்டுநாயக்க விமான நிலையத்தில் விசேட பாதுகாப்பு ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன், மேல் மாகாண பிரதிப் பொலிஸ் மா அதிபருக்கு இது தொடர்பில் உத்தரவிட்டுள்ளார்.

ஜனாதிபதி நாட்டிற்கு வரும்போது உயர் அடுக்கு வாகன பேரணிக்கு, எதிரான அரசியல் கருத்துக்களைக் கொண்டவர்கள் சில வகையான நாசவேலைகளில் ஈடுபடுவதற்கான சாத்தியக் கூறுகள் உள்ளமையினால் இந்த நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அவர் உத்தரவிட்டுள்ளார்.

ஆயுதக் குழுக்களின் தாக்குதல் சாத்தியம், சினைப்பர் தாக்குதல் அபாயம், பொதுமக்களால்

குழப்ப நிலைகளை ஏற்படுத்தும் மற்றும் ஆர்ப்பாட்டங்கள் இடம்பெறும் சாத்தியம் உள்ளிட்ட 6 விடயங்கள் தொடர்பான அபாயம் உள்ளதாக சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் வலியுறுத்தியுள்ளார். (ம-7)

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 25/06/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1611
வெற்றி இலக்கங்கள்
விருச்சிகம் 8 2 1 2 9 7
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி 2023.06.25
சீட்டிழுப்பு இலக்கம் 1186
L 01 43 54 67
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்

கொவிசெத
திகதி 2023.06.25
சீட்டிழுப்பு இலக்கம் 3398
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்
J 06 24 52 55
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 25/06/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1504
வெற்றி எழுத்து சுப்பர் இலக்கம் வெற்றி இலக்கங்கள்
F 15 08 11 31 67

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2023.06.25
சீட்டிழுப்பு இலக்கம் 465
மிதுனம் 02 18 45 58 மிதுனம்
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2023/06/25
சீட்டிழுப்பு இலக்கம் 5156
ஆங்கில எழுத்து வெல்லப்பட்ட இலக்கங்கள்
X 2 5 3 8 6 6
தேசிய லொத்தர் சபை

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2130
நிறம் செம்மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி 2023.06.25
தினம் ஞாயிற்றுக்கிழமை
T 03 12 32 40
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 3,864,480/-
DLB

சனிதா
ஞாயிற்றுக்கிழமை
சீட்டிழுப்பு திகதி 2023.06.25
வெற்றி வாரம் 4291
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 30,780,735.00
வெற்றி இலக்கங்கள்
29 53 63 67 J
DLB

சசிரி
வெற்றி வாரம் 341
சீட்டிழுப்பு திகதி 2023.06.25
வெற்றி இலக்கங்கள்
12 35 41
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,505,660/-
DLB

ராசி
சுப்பர் ஜக்பொட் பரிசு வெல்லப்பட்டுள்ளது ரூ. 2,198,314/-
திகதி 2023-06-25
வெற்றி வாரம் 3842
வர்ணம்
வெற்றி இலக்கங்கள்
10 57 58 61
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 10,284,634/-
DLB

கப்ருக
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
W 04 20 26 28 72
சுப்பர் இலக்கம்
சீட்டிழுப்பு வாரம் 1306
மஞ்சள்
2023.06.25 ஞாயிறு
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 340,755,922.20
DLB

அட கோடிபதி ADA KOTIPATHI
ஞாயிற்றுக்கிழமை
வெற்றி வாரம் : 1956
சீட்டிழுப்பு திகதி : 2023.06.25
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 53,486,325.20
வெற்றி இலக்கங்கள்
11 12 51 77 B
DLB

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (16027)

076 825 7716 (ஆகாஸ்)

## நாராயண தைலம்

சகலவிதமான நரம்புகள் தொடர்பான நோய்கள், பாரிசவாதம் மற்றும் குருதிச்சுற்றோட்டத்தினை சீர்செய்வதற்கும் கடுமையான நோவுக்கும் பயன்படுத்தலாம்.

நாராயண தைலம் NARAYANA THILAM (C-6816)

MANUFACTURED BY :
SRILANKA AYURVEDIC
DRUGS CORPORATION

சந்தைப்படுத்துவோர் :
சிவா நறுமணப் பூங்கா
288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P : 021 222 2567


## சட்டங்கள்...

சட்டம் பாதுகாக்கப்படும் ஒரு நாடு. அத்துடன் அந்த சட்டங்கள் நியாயமான முறையில் நடைமுறைப்படுத்தப்படும் நாடொன்றை எதிர்பார்க்கிறீர்கள். எனினும் ஆட்சியாளர்கள் என்ன நினைக்கிறார்கள்?

நாம் சட்டத்தில் சிக்கியுள்ளோம். அதிலிருந்து விடுபடும் வழிமுறையை பார்க்கிறார்கள்.எனினும் மக்களின் எதிர்பார்ப்பும். ஆட்சியாளர்களின் எதிர்பார்ப்பும் இரண்டு விதமாக இருக்கிறது. எந்த திசையில் கட்டியெழுப்பப்படுகிறது என கூற முடியுமா?

தொட்டில் இந்த டிக்கம் இருக்கும். மீண்டும் 5 வருடங்களில் மறுபக்கத்திற்கு சென்றுவிடும். அழகான முறையில் அந்த தொட்டில் ஆடுகிறது.

சிலர் தொட்டிலில் ஆடும் போது அதில் ஏறி மறுபுறம் வருகின்றனர். எவரும் இறங்குவதில்லை. தற்போது தொட்டில் இடையில் சிக்குண்டுள்ளது. எனவே அதனை தடுப்பதற்கான அனைத்து விடயங்களையும் அவர்கள் மேற்கொள்கின்றனர் என்றார்.(ம-7)


## VILLAGE HOTEL JAFFNA EXPRESS

யாழ் - கொழும்பு பஸ் சேவை

AIRPORT PICK UP DROP SERVICE

அன்னை முத்துமாரி பஸ் சேவை
இனி வரும் காலங்களில்
VILLAGE HOTEL எனும் பெயரில்...



கட்டணம் - 2800/= (16033)

T.P:077 544 8503

## KBK கணக்கீட்டு கல்லூரி

| | |
|---|---|
| சுவாமியார் வீதி, கொழும்புத்துறை. | பலாலி வீதி, கந்தர்மடம். |

A/L 2025
(தமிழ்/ ஆங்கில மொழி மூல வகுப்புக்கள்)
இரு இடங்களிலும் அனுமதிகள் வழங்கப்படுகின்றன

ACCOUNTING
MR.K.BALAKAJEN SLTS
B.Com(jaf), H.N.Dip-in-Acc(ATI), Dip-in Edu (OUSL)
M.Com(Hons), ACC.Spl

A/L 2023, A/L 2024 பிரிவுக்கான துரித மீட்டல் வகுப்புக்கள் நடைபெறுகின்றன. (16090)

077 452 0043 (Whatsapp)

## காணி விற்பனைக்கு

மாதகல் ஞான சிந்தாமணிப் பிள்ளையார் கோவில் (வன்னியர்) அருகில் அமைந்துள்ள 13 பரப்பு பனைகளுடன் கூடிய காணி உடன் விற்பனைக்கு (16066)

தரகர் தேவையில்லை

074 020 6158

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் புத்தூரில் 24 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.

- பருத்தித்துறை வீதி புத்தூர் சந்தியில் இருந்து சாவகச்சேரி செல்லும் பிரதான காபற் வீதி முகப்புடன்
- புத்தூர் தண்ணீர் தாங்கி அருகாமை(நிலப்பரப்பு)
- மூன்று பரப்பாகவும் இரண்டரைப் பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்
- வியாபார நிலையங்கள், திருமண மண்டபங்கள், வீடு அமைப்பதற்கு உகந்த இடம்
- ஒரு பரப்பின் விலை இரண்டு இலட்சம் ரூபாய் மட்டும்.
- பார்வையிடும் நேரம் காலை 6 மணிமுதல் மாலை 6 மணிவரை.
- நன்னீர் ஊற்று.

(16094)

076 733 6047
076 755 8606
076 911 9371

## வடமாகாண சுற்றுலாத்துறை ஒன்றியம்

NPTA

வருடாந்த பொதுக்கூட்டம் (AGM) 2023

திகதி/ நேரம் - 26.06.2023 / 6pm
இடம் - TILKO CITY HOTEL JAFFNA
நுழைவு - ரூபா 3000/=
(இரவு போசனம் உட்பட)
அங்கத்துவம் - சுற்றுலாத்துறை வர்த்தக உரிமையாளர்கள்

அங்கத்தவர்களுக்கு பிரத்தியேகமாக அரச, தனியார், வங்கி கடன்கள் முதலீடுகள் மேலும் பல சேவைகள் பெற்றுத்தருவதற்கான ஒப்பந்தங்கள் செய்யப்பட்டுள்ளன. யாழ்ப்பாண விமான நிலையம் காங்கேசந்துறைமுகம் ஆகியவற்றில் எமது முகவர் நிலையங்களை அமைப்பதற்கான முன்னேற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. தேவையின் அடிப்படையில் நிகழ்விற்கு வருபவர்களுக்கு யாழ் நகரில் இலவச தங்குமிட வசதிகள் செய்து தரப்படும். (C-6802)

021 222 4550
077 730 4545

## VISA விண்ணப்பங்கள்

அனைத்து நாடுகளுக்குமான விசா விண்ணப்பங்கள்,ஆலோசனைகள்
- ✓ONLINE APPLICATIONS
- ✓VISA APPOINTMENTS
- ✓PASSPORT APPLICATION
- ✓POLICE CLEARANCE

என அனைத்து விதமான விசா ஏற்பாடுகளும் செய்து தரப்படும்.

Srilankan Visa Extension வெளிநாட்டு Passport களுக்கு இலங்கை விசா நீடித்து தரப்படும்.

VISA • STUDENT VISA • TOURIST VISA • SPOUSE VISA • SUPER VISA
கனடா ஐரோப்பா ஜெர்மனி பிரான்ஸ் லண்டன் சுவீஸ் அமெரிக்கா (C-6818)

COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
49A,சப்பல் லேன், யாழ்ப்பாணம். V2 TRAVELS

0777-068-777

## அமெரிக்க லொத்தர் விசா

V2 TRAVELS


2022ம் ஆண்டு விண்ணப்பித்தவர்களின் பெறுபேறுகள் வெளியாகி விட்டன.



அதிஸ்டசாலியாக தெரிவு செய்யப்பட்டவர்களின் அடுத்த கட்ட விசா நடவடிக்கைகள் ஆரம்பமாகிவிட்டன. (C-6818)

0768226240 / 0768226241


# ஓராண்டு நினைவும் ஆத்மசாந்தி மதியபோசண அழைப்பும்



"அப்பா உமையிழந்து ஆண்டொன்று சென்றாலும்
எப்பொழுதும் எம் மனதில் இறையாய் இருந்திடுவீர்"

## திருமுருகமாமணி, கலைவாருதி
## சிவத்திரு. காசிப்பிள்ளை
## ஆறுமுகம் தியாகராசா

( மரபுவழி அறங்காவலர் ஸ்ரீ நாகபூசணி அம்மன் கோவில் நயினாதீவு, ஓய்வுநிலை பிரதேச செயலர் தீவகம் தெற்கு - வேலணை)

அன்னையின் மடியில்
25.02.1938

அம்பிகை அடியில்
07.07.2022

கடந்த 07.07.2022 வியாழக்கிழமை அன்று இறைபதம் எய்திய எமது குடும்பத் தலைவரின் ஓராண்டு நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் மதியபோசனமும் 26.06.2023 திங்கட்கிழமை காலை 11.00 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தாயே ஆகி வளர்த்தனை போற்றி

இல.58/9,
செட்டித்தெரு,
நல்லூர். (16092)

இங்ஙனம்:
குடும்பத்தினர்
தொ.இல : 074 225 2876

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தால் இல.191, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 26.06.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.